உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
திங்கள் தமிழ்த்தாள்

மலர் : இருபத்தெட்டு

1955

பத்திராசிரியர் :

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர் :

புலவர் - முருகவேள், பி. ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
192, லாயிட்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை—14

# உள்ளுறை


| பொருள் — கட்டுரையாளர் | பக்க எண் |
|---|---|
| அகனும் அகமும்—R. பஞ்சநதம் பிள்ளை ... | 327 |
| அப்பூதியடிகள்—ச. சிவகுமாரன், எம். ஏ. ... | 106 |
| அரிமாநோக்கு—பத்திராசிரியர் ... | 1 |
| அருணகிரிநாதர் சமயக்கொள்கை—ஜி. எஸ். ராஜன் ... | 238 |
| அருளும் பொருளும்—அ. கு. காமாக்ஷியம்மையார், எம். ஏ. | 231 |
| ஆதிபகவன் எண்குணத்தான் அறவாழியந்தணன்—சி. என். சிங்காரவேல் முதலியார் ... | 199 |
| ஆமையும் அரசரும்—R. பஞ்சநதம் பிள்ளை ... | 262 |
| ஆலடியும் மூவடியும்—பத்திராசிரியர் ... | 49 |
| இயற்பகை முனிவர்—M. P. தியாகராஜன், பி. ஏ. ... | 60 |
| இருஞானியர் பெருமறைவு—பத்திராசிரியர் ... | 257 |
| இளையான்குடிமாறநாயனார்—M. P. தியாகராஜன், பி. ஏ. ... | 206 |
| உறையூர்—சுவாமிநாத தேசிகர் ... | 399 |
| எறிபத்தர் ஆண்மைத்தொண்டு—பத்திராசிரியர் ... | 97 |
| என் தாத்தா (சிவஞானம் பிள்ளை)—மு. சிதம்பரத்தம்மாள் ... | 259 |
| கரும்பும் இரும்பும்—R. பஞ்சநதம் பிள்ளை ... | 296 |
| கலையும் பக்தியும்—அ. தா. ப. திருஞானசம்பந்தம் ... | 266 |
| களேபரம்—உதவிப்பத்திராசிரியர் ... | 332 |
| குமரகுருபர ஸ்வாமிகளின் அற்புதங்கள்—அ. கணபதி பிள்ளை ... | 393 |
| கோமதி அந்தாதி—அம்பை சங்கரனார் ... | 329 |
| கோலாலம்பூர் சைவப் பெண்கள் மாநாட்டுத் தலைமையுரை—அன்னலக்ஷ்மி சுந்தரம். ... | 148 |
| சக்தி வழிபாடு—அ. கு. காமாக்ஷியம்மையார், எம். ஏ. ... | 135 |
| சமாஜ உத்தியோகஸ்தர்கள் ... | 55 |
| சமாஜத் தலைவர் முன்னுரை—நல். முருகேச முதலியார் ... | 28 |
| சமாஜ 49-ம் ஆண்டு அறிக்கை ... | 81 |
| சமாஜ 49-ம் ஆண்டு விழா—G. கல்யாணம், எம். ஏ. ... | 5 |
| சர் பொன்னம்பலம் அருணசலம்—வட்டுக்கோட்டை நாகலிங்கம் | 155, 173 |
| சாக்கிய நாயனார்—M. P. தியாகராஜன், பி. ஏ. ... | 366 |

சித்திரைச் சதயம்—பத்திராசிரியர் ... 129
சிவஞானதீபம்—ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் ... 113
சிவாலய பூசை விளக்கம்—ம. சுவாமிநாத சிவாச்சாரியார் ... 177
சைவ இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை—சி. இராமலிங்கம், எம்.ஏ. ... 33
சைவத் தேர்வு வினாக்கள்—1955 ... 363
சைவப் பெருமக்கட்கு ஒரு விண்ணப்பம்—ச. சச்சிதானந்தம் பிள்ளை ... 323
சைவ மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை—எஸ். பாகீரதி அம்மையார், எம்.ஏ. ... 65
சைவர் மாநாட்டுத் தலைமையுரை—ஸர் கந்தையா வைத்திய நாதன் 11, 86
தாயுமானவர்—ஆ. அப்பாதுரை ... 202
திருநீலகண்ட நாயனார்—எம். பி. தியாகராஜன், பி.ஏ. ... 145
திருப்பணி மஹா கும்பாபிஷேகம்—சிதம்பரம் ... 175
திருமுறைகண்ட திருமறை நம்பி—பத்திராசிரியர் ... 161
திருமூலர்—பத்திராசிரியர் ... 321
திருவெம்பாவை—பத்திராசிரியர் ... 385
தில்லைக்கூத்தன் தொல்லை மாண்பு—பத்திராசிரியர் ... 225
தீர்மானங்கள் ... 54
தேன் அணி—வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம்.ஏ. ... 295
தொல்காப்பியச் சிறப்பு—உதவிப் பத்திராசிரியர் ... 391
நரசிங்கமுனையரைய நாயனார்—வித்வான் வே. பூதலிங்கம் ... 360
நாலாயிரப்ரபந்தவிசாரம்—ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் 209, 241, 273, 305, 337, 369
நால்வர் திருவாக்கும் ஆழ்வார்கள் அருளிச்செயல்களும்—பத்திராசிரியர் ... 193
நான்காம் திருமுறை காட்டும் நன்னெறி—எம். பி. தியாகராஜன், பி.ஏ. ... 164
பால்பானைமேல் வால்பூனை—ஆ. அப்பாதுரை ... 170
பித்தர் பெருமை—சுவாமி மதுரானந்தா, பி.ஏ. ... 297
பிரார்த்தனைப் பேறு—எம். பி. தியாகராஜன், பி.ஏ. ... 300
பிள்ளையார் சதுர்த்தி-ஆயுதபூஜை—பத்திராசிரியர் ... 289
பிறர்க்கின்னுரை—அ. தா. ப. திருஞானசம்பந்தம் ... 404
பேழ்கணித்தல்—டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி, எம்.ஏ., பிஎச்.டி. ... 139

மாலை—முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் 57, 110
முப்பத்தாறு தத்துவங்களின் பேர்—மாவை இலக்கணச் சுவாமிகள் ... 408
மும்மையால் உலகாண்ட மூர்த்தி—ஜி. எஸ். ராஜன் ... 264
மெய்கண்டாரும் பொய்கண்டாரும்—பத்திராசிரியர் ... 353
மெய்ந்நெறியும் மெய்கண்ட நூற்களும் ... 356
வள்ளி சன்மார்க்கம்—நல். முருகேச முதலியார், பி எ. ... 99
வாகன கவி—அம்பை சங்கரனார் ... 395
விதியும் பதியும்—க. ர. ஆதிலட்சுமியம்மையார் ... 143
விரதங்களும் அதிகமாஸமும்—ம. சுவாமிநாத சிவாசாரியார் 292
வேதகிரீசுவரர் பதிகம்—சி. என். சிங்காரவேலு, எம்.எ. ... 334

---

## கட்டுரையாளர்கள் பெயர்
## அகர வரிசையும் பக்கங்களும்

அப்பாதுரை 170, 202 ; அம்பை சங்கரனார் 329, 395 ; அன்னலக்ஷ்மி சுந்தரம் 148 ; ஆதிலக்ஷ்மி அம்மையார் 143 ; இராமலிங்கம் 33 ; இலக்கணசுவாமிகள் 408; உதவிப் பத்திராசிரியர் 332, 391 ; கணபதிப்பிள்ளை 393 ; கலியாணம் 5 ; காமாக்ஷியம்மையார் 135, 231 ; சச்சிதானந்தம் பிள்ளை 323 ; சிங்காரவேல் முதலியார் 199, 334 ; சிதம்பரத்தம்மாள் 259 ; சிவகுமாரன் 81, 106; சுவாமிநாத சிவாசாரியார் 177, 292 ; சுவாமிநாத தேசிகர் 399 ; சுவாமி மதுரானந்தா 296 ; செங்கல்வராய பிள்ளை 295 ; தியாகராஜன் 60, 145, 164, 207, 300, 366 ; திருஞானசம்பந்தன் 266, 404 ; தேவசேநாபதி 139 ; நாகலிங்கம் 155, 172; பஞ்சநதம் பிள்ளை 262, 296, 327 ; பத்திராசிரியர் 1, 49, 97, 129, 161, 193, 225, 257, 289, 321, 353, 385; பாகீரதி அம்மையார் 65; பூதலிங்கம் 360; மாணிக்கவாசக முதலியார் 57, 110; முருகேச முதலியார் 28, 99 ; ராஜன் 238, 264; வைத்தியநாதன் 11, 86; ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் 113, 209; 241, 273, 305, 337, 369.

---

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14.

Regd M. 2330

உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு

மலர் 28 | ஜய தை 1955 ஜனவரி | இதழ் 1

## அரிமா நோக்கு

பத்திராசிரியர்

"தைபிறந்தால் வழி பிறக்கும்" என்பது தமிழ்நாட்டில் வழங்கும் பழமொழிகளுள் சிறந்தவொன்று. இப்பழமொழியைத் துருவியாராய்ந்தால் பல துறைகளிலும் பலவகையான பொருள்கள் புலப்படும். பொதுவாக அமைதியற்றிருக்கும் நிலைமையை மாற்றி நல்ல வழியையும் தெளிவையும் காட்டுவது தை மாதப்பிறப்பு என்ற பொருள் இப்பழமொழியினுள் வெளிப்படையாகக் காணப்படும். பன்னிரண்டு மாதங்கொண்ட ஒரு மனுஷ்ய வருஷம் தேவர்களுக்கு ஒரு நாளென்றும், அதில் தை மாதம் முதல், ஆனியீருகவுள்ள ஒரு பகுதி பகலென்றும், ஆடிமுதல் மார்கழி யீருகவுள்ள மறு பகுதி இரவென்றும் புராணம் கூறும். பொதுவாக நமது அநுபவத்தில் பார்க்கும்போது தை மாதமுதல் ஆனி மாதம் வரையுள்ள காலம் சூரிய வெளிச்சம், நல்ல காற்று, சுத்தமான தண்ணீர் முதலியன மிகுதியாகவும் செம்மையாகவும் உள்ள காலமாகும். தமிழ்நாட்டினர் இக்காலத்தில் நெல் முதலிய தானியங்களை அறுத்து ஓராண்டுக்குத் தேவையான பண்டங்களைச் சேமித்து வைத்து இயற்கையோடியைந்த இன்பத்தை அநுபவித்துக் கடவுள் வணக்கம், திருமணம், தலயாத்திரை முதலியன செய்தற்குரிய ஓய்வைப் பெற்றுத் தங்கள் வாழ்க்கையைச் செவ்விதின் நடாத்துவர். ஆடிமுதல், மார்

குறி யிருகவுள்ள காலத்தில் நம்மவர்கள் உழவு முதலிய தொழில்களில் ஈடுபட்டு மழை, மழைக்காற்று முதலியவை களின் தொந்தரவால் உடல் நலன் குறைவுற்று, ஓய்வு, மனவமைதி முதலியன வின்றிப் பொதுவாகக் குறைந்த வின்பத்தையே அநுபவிப்பார்கள். பிறப்பு இறப்புக் கணக்கைப் பார்க்கும்போது தைமுதல் ஆனிவரை இறப் பவர்கள் தொகையைவிட, ஆடிமுதல் மார்கழி வரை இறப் பவர்கள் தொகை இரண்டு அல்லது மூன்று பங்கு அதிகமா யிருக்கும். இங்கு தமிழ்நாட்டினர் என்றது தமிழ்நாட்டி லுள்ள கிராமங்களிலுள்ளோரைக் குறிப்பதேயன்றி ஆங்கில நாகரிகத்திற்றோய்ந்து கிடக்கும் நகர வாசிகளை யல்ல.

இதற்கெல்லாம் காரணம் என்னவென்று ஆராய்ந் தால் சூரியன் நிலை மாறுவதே என்ற உண்மை புலனாகும். தற்போதைய வான சாத்திரத்தின்படி கணக்கிட்டால் டிசம்பர்மீ கடைசி முதல் ஜூன்மீ கடைசிவரை சூரியன் தெற்கேயிருந்து வடக்கே செல்லுவதாகவும், ஜூன்மீ கடைசி முதல் டிசம்பர்மீ கடைசிவரை வடக்கேயிருந்து தெற்கே செல்வதாகவும், மார்ச்சுமீ 21வ, செப்டம்பர்மீ 23வ ஆகிய இரண்டு நாட்களிலும் இரவும் பகலும் சமமாயிருக் கும் நிலையிலிருப்பதாகவும் (equinoxes) காண்கிறோம். மேலும் டிசம்பர்மீ கடைசி முதல் ஜூன்மீ கடைசிவரை யுள்ள ஆறு மாதங்களில் பொதுவாக பூமிக்கு அருகில் சூரியன் வருவதாகவும் மற்றைய ஆறுமாதங்களில் பொது வாகச் சற்று விலகிப் போவதாகவும் நவீன வான சாத்திரம் கூறுகின்றது. டிசம்பர் கடைசி, ஜூன் கடைசி என்ற காலவரையறைகட்கு(Solstices)என்று பெயர். பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் இந்த இரண்டும் சரியாக தைமீ க தேதி ஆடிமீ க தேதியிலேயே வந்து கொண்டிருந்தன. ஆனால் சித்திரைவிஷு மேஷ முதற்புள்ளி (First point of Aries) என்ற நிலையானது மேஷத்தை விட்டுச் சிறிது சிறிதாக மீன வீட்டிற்குச் செல்வதால் அதற் கேற்ப இந்த (solstices) என்ற நிலைகள் தை ஆடிமீ முதல் தேதிகளிலிருந்து மார்கழி ஆனி கடைசி சில தேதி களுக்குள் தள்ளப்பட்டுவிட்டன. ஆகையால் தற்போதைய உத்தராயணம் மார்கழிமீ ஏறக்குறைய கரு தேதிக்கே

ஆரம்பித்து விடுகிறது. தக்ஷிணாயனமும் ஆனிமீ ஏறக்குறைய உ0 தேதிக்கே ஆரம்பிக்கிறது. இவ்வுண்மைகளெல்லாம் மிகத்திருத்தமாகக் கணிதம் செய்யுங்கால் தோன்றுவன வாகும். பொதுவாக தைமீ முதல் தேதி உத்தராயணம் தொடங்குவதாகவும், ஆடி மாதம் முதல் தேதி தக்ஷிணாயனம் தொடங்குவதாகவும் வைத்துக்கொள்வதுதான் பெருவழக்காக இருக்கிறது.

தமிழ்நாடு, equator என்ற மத்திய ரேகைக்கு வடக்கேயுள்ளது. ஆனால் இங்கிலாந்து முதலிய நாடுகளைப்போல் மிகவும் வடக்கேயுள்ளதல்ல. இங்கிலாந்து முதலிய நாடுகள் மிகவும் வடக்கேயுள்ளபடியால் சூரியன் எக்காலத்திலும் அந்நாடுகளில் தென்புறத்திலேயே பிரகாசிக்கும். உச்சியைக் கடந்து ஒருபோதும் வடபுறம் வருவதே கிடையாது. இதனால் வேனிற்காலத்தில் 18 மணி நேரம் வெயிலும் 6 மணி நேரம் இரவும் கொண்ட நாளும், டிசம்பர் மாதம் போன்ற பனிக்காலத்தில் 18 மணி நேரம் இரவும் 6 மணி நேரம் பகலும் கொண்ட நாளும் அந்த நாடுகளில் இருக்கும். வேனிற்காலத்தில் 18 மணி நேரம் வெயிலிருந்தாலும் நமது நாட்டு உஷ்ண நிலைக்குப் பெரிதும் குறைந்தேயிருக்கும். இதிலிருந்து கால வேற்றுமைகள் அந்நாடுகளில் அதிக கொடுமையையே விளைவிக்குமென்பது வெளிப்படை. நமது தமிழ்நாடு அவ்வாறு அமையவில்லை. கால வேற்றுமையால் சீதோஷ்ண வேற்றுமை அதிகக் கொடுமையை விளைவிப்பதில்லை. எனவே எல்லா நாடுகளைவிட நமது தமிழ்நாடே இயற்கையோடியைந்த வாழ்க்கையை இனிது நடாத்துவதற்குப் பெரிதும் இசைந்ததென்பது பெற்றாம்.

இத்தகைய இயற்கை வாழ்வைச் செவ்வனே நடாத்தியதின் பலனாகத்தான் கடவுளுணர்ச்சி, தத்துவ ஆராய்ச்சி, அகத்துறைப் பயிற்சி முதலியன நமது நாட்டில் தலைசிறந்து விளங்கின. இது நிற்க.

சூரியன் தென்புறமிருந்து வடபுறம் வரும்போதே பூமிக்கு அருகிலும் வருகிறது. தென்புறம் மிகச் சாய்வாக இருப்பதைவிட்டு, வடபுறமாக உயர்ந்து உச்சியை எட்டிப் பிறகு உச்சியைத்தாண்டி வடக்கிலும் வருங்காலத்து, சூரிய கிரணங்கள் சாய்வாக நிலத்தில் விழாமல், நேராகவும் செங்குத்தாகவும் விழுகின்றன. இதனால் சூரிய கிரணங்களி

னுள்ள சக்தியை அதிகமாக பூமியும் பூமியிலுள்ள ஜீவ ராசிகளனைத்தும் பெறுகின்றன. சூரியன் அருகே வருவதா லும் இச்சக்தி அதிகரிக்கின்றது. இதனாற்றான் இயற்கை ஒளிர்வதும் மக்கள் இன்புறுவதும் உத்தராயணத்தில் அதிகமாயிருப்பதைக் காண்கிறோம்.

இத்தகைய இன்ப மிகுதிக்குக் காரணமாயுள்ளவன் சூரியன் என்பதை நந்தமிழ்நாட்டினர் நன்குணர்ந்து சூரியன் இன்பத்தை அதிகரிக்கத் தொடங்கும் முதல் நாளாகிய உத்தராயணத் தொடக்கத்தில் சூரியனுக்குப் பூசைகள் செய்தனர். அந்தப் பூசையைத்தான் மகர சங்க் ராந்தியென்றும் பொங்கல்விழா வென்றும் நாம் கொண் டாடுகிறோம். மழையினால் நெற்பயிர் விளைவதால், மழைக் கதிபதியாகிய இந்திரன் என்ற "போகி"க்கும் "போகி பண்டிகை" ஒன்றைக் கொண்டாடுகிறோம். இவ்வுலகத்தி லுள்ள உயிர் வாழ்க்கைக்கும் இன்ப வாழ்க்கைக்கும் காரணனாயுள்ளவனும், சிவபெருமான் அட்டமூர்த்தங்க ளுள் ஒருவனாயுள்ளவனுமாகிய சூரியனுக்கு உத்தராயண புண்ணிய காலத்துள் முதல் நாளையும், சிலகாலம் போகியா யிருந்தும் மீண்டும் பிறப்பு இறப்பு என்னும் கடலில் மூழ்கும் இந்திரனுக்குப் "பீடை" மாதத்துக் "கடை" நாளையும் பூசைக்கென வகுத்த நந்தமிழ் நாட்டுப் பண்டை யோர் பேரறிவை எவ்வாறு மெச்சுவது ?

பிணி, அழுக்கு, பழமை முதலியவற்றைப் போக்கிப் புத்துயிரும் புதிய இன்பமும் பெறும் நிகழ்ச்சிக் கறிகுறி யாக வீடு வாசல்களிலுள்ள எல்லாவகையான அசுத்தங் களையும் ஒழித்து, எரித்துப் போக்கி, கூடுமானவைகளை யெல்லாம் புதுப்பித்து, புதுப்பாண்டங்களில் புது அரிசி யைக் கொண்டு பொங்கல் வைத்து, நமது இன்பம் பொங்கு வதைப் பொங்கல் விழாவெனக் கொண்டாடுகிறோம். கடவுள் உணர்ச்சி நமது நாட்டில் தினசரி வாழ்க்கையில் வேறூன்றி யிருப்பதால் இவ்விழாவைக் கேவலம் களியாட் டாகக் கொள்ளாது, சிறந்த கடவுள் வழிபாடாகவே நாம் கொண்டிருப்பது நோக்கத்தக்கது. பெறுதற்கரிய மானுடப் பிறவியைத் தந்த நமது தாய் தந்தையர்களை மறத்தல் கூடாதென்றே இந்த நன்னாளில் தென்புலத்தார் கடனையும் ஆற்றவேண்டுமென்று நமது நாட்டுப் பேரறிஞர்

கள் வகுத்தனர். உழவுமிகுந்த நமது நாட்டில் மாடுகள் நமக்குச் செய்யும் பேருபகாரத்தை யுணர்ந்த முதுமக்கள் 'மாட்டுப் பொங்கல்' ஒன்றையும் கொண்டாடினர். "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற உண்மை ஆவல் உடைய ஆன்றோர், தாங்கள் மட்டும் இன்புற்றிராது, தங்கள் நண்பர்கள் உறவினர்கள் முதலியோரையும் கண்டு அளவளாவி இன்புற்றிருந்தனர். இதையே "காண்பொங்கல்" அல்லது "கண்ணுப்பொங்கல்" என்று இப்போது வழங்குகிறோம்.

இன்ப உணர்ச்சி மிகுதியும் தோன்றுங்கால் இடையூறுகள் கதிரொளி கண்ட கடும்பனிபோல் கால்விட்டோடும். எனவே, தை பிறந்தால் வழி பிறக்கும். தை பிறந்தால் இன்பம் பிறக்கும். இன்பம் பிறந்தால் இடையூறு அகலும்; நல்வழி பிறக்கும்.

---

# சமாஜ 49-ஆம் ஆண்டுவிழா

[G. கலியாணம் M.A., D.Econ.]

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 49-ஆம் ஆண்டு நிறைவு விழாவும், சைவர் மாநாடு, திருக்குறள் மாநாடு, சைவ இளைஞர், சைவ மங்கையர் மாநாடுகளும் விருதுநகர் ஸ்ரீ வால சுப்பிரமணிய சுவாமி கோயிலில் 25, 26, 27–12–54 ஆகிய நாட்களில் வெகு சிறப்பாக நடந்தேறின.

விழாத் தலைவர், இலங்கை அமைச்சர் - கனம் சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் கொழும்பிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு வானவூர்தி வழியே வந்திறங்கிப் பின்னர் மதுரை வழியாக விருதுநகருக்கு 24—12—54 மாலை 6-மணிக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களை விருதுநகர் நகர மன்றப் பிரயாணிகள் விடுதியின் முன்னர் நகரமக்களும், அரசாங்க அலுவலர்களும் மாலைகளிட்டு வரவேற்றார்கள். இராமநாதபுரம் போலீசார் அணிவகுத்து மந்திரியாருக்கு மரியாதை செய்தனர்.

## சைவர் மாநாடு - முதல்நாள்

25—12—54 காலை 8-மணிக்கு ஊர்வலம் புறப்பட்டது. தலைவரவர்கள், திரு. கருமுத்து தியாகராச செட்டியார் அவர்கள், திரு. ச. வெள்ளச்சாமிநாடார் அவர்கள் மூவரும் இரு குதிரைகள் பூட்டிய கோச்சுவண்டியில் வீறுபெற வீற்றிருந்தனர். மேளவாத்தியம் முழங்கிற்று; மாதர் மணிவாசக சங்கத்தினர் முன்னணியில் திருவாசக அகவற் பாராயணம் செய்து சென்றனர்; பின்னணியில் சென்ற ஆண்மக்களும் அங்ஙனே செய்தனர்; வீதிகளின் இருமருங்கும் மக்கள் திரளாக இருந்து பார்வையிட்டனர்; கடைவீதி, மாடவீதிகள் சுற்றி ஊர்வலம் 9-30 மணிக்கு வாலசுப்பிரமணிய சுவாமி கோயில் முன்வந்தது; அப்படியே புகைப்படம் எடுக்கப்பட்டது; ஊர்வலம் வரும்போது கதிரவனும் தன் வெம்மையைக் காட்டாது கருணைசெய்தான்; மேகங்களின் பின் மறைந்திருந்து வேடிக்கை பார்த்தான்.

முருகன் திருமுன் வழிபாட்டின் பின்னர், மாநாடு தொடங்கியது. கடவுள் வணக்கப் பாடல்களின் பின் சமாஜத் தலைவர் திரு. நல். முருகேச முதலியாரவர்கள் முன்னுரை கூறினார்கள். வரவேற்புக் கழகத் தலைவியார் திருமதி. மு.ச.பெ.செ.ச. சரசுவதியம்மாள் தம் வரவேற்புரையை நிகழ்த்தினார்கள். மதுரை மீனாட்சி ஆலை அதிபர் திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் சமாஜக் கொடியை ஏற்றுவித்து, விரிவுரை ஆற்றினார்கள். திரு. சர். பி.டி. இராசன் அவர்கள் தம் தொடக்கவுரையை நிகழ்த்தினார்கள். சமாஜச் செயலாளர் திரு. ச. சிவகுமாரன், எம்.ஏ. 'சித்தாந்தம்' உதவிப் பத்திராசிரியர் திரு. புலவர் - முருகவேள், பி.ஓ.எல். இவர்கள் தலைவர் முதலிய எல்லோருக்கும் வரவேற்புப் பாக்களை வாசித்தளித்தனர்; சமாஜ ஆண்டறிக்கையைச் செயலாளர் வாசித்தனர். திரு. வீர. சிவசுப்பிரமணியம் அவர்கள் தருமை, மதுரை ஆதீனங்களினின்றும் வந்த வாழ்த்துக்களைப் படித்தனர். பின்னர் மாநாட்டுத் தலைவர் கனம் சர். கந்தையா வைத்தியநாதன், சைவ மங்கையர் மாநாட்டுத் தலைவியார் திரு. பாகீரதி அம்மையார், எம். ஏ. சைவ இளைஞர் மாநாட்டுத் தலைவர் திரு. C. இராமலிங்கம், எம்.ஏ. தங்கள் தலைமைப் பேருரை

களை நிகழ்த்தினார்கள். முற்பகல் நிகழ்ச்சிகள் 1-மணிக்கு முடிவடைந்தன.

மாலை 3-30 மணிக்கு விருதை சைவ சித்தாந்தக் கழகத்தார் இலங்கை அமைச்சருக்கு ஒரு தேநீர் விருந்து செய்து சிறப்பித்தார்கள். 4-30 மணிக்கு மாநாடுமீண்டும் கூடியது. முதலில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் "நால்வர் காட்டிய நல்வழி" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். பின்னர் திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ.எல்.டீ. அவர்கள் "சுத்தாத்துவைதம்" என்னும் பொருள்பற்றியும், திரு. வித்துவான் அ. க. நவநீத கிருஷ்ணன் அவர்கள் "திரிபதார்த்தம்" என்பதுபற்றியும், திருமதி. புஷ்பம் நடராஜன் அம்மையார் அவர்கள் "பெருமை சேர்வடிவம் வேண்டிப் பெற்றவர்" என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் அவர்களின் கருத்துரைக்குப் பின் இரவு 8-மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது. பிறகு அவர்கள் சிவன் கோவிலுக்குச் சென்று வழிபாடாற்றிவிட்டு, அங்கயற்கண்ணி தன்னோடமர்ந்த ஆலவாயண்ணலின் அடிதொழுதற்காக மதுரை சென்றார்கள்.

## இரண்டாம்நாள்

26—12—54 காலை 7-மணிக்குப் பாலகுருகுலத்தில் சமாஜ உறுப்பினர்களின் பொதுக் காரியக் கூட்டம் நடந்தது. திரு. முத்த. வே. சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கள் தலைமைவகித்தார்கள். உத்தியோகஸ்தர் தேர்தல், தீர்மானங்கள் முதலியன நிறைவேறின. (இவைகளை அடுத்த மாத இதழில் காணலாம்.)

மாநாட்டுப்பந்தலில் காலை 9-மணிக்குத் திருக்குறள் மாநாடு தொடங்கியது. கனம் சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமைவகித்தார்கள். திரு. ச. வெள்ளைச்சாமி நாடார் அவர்கள் திறப்புரை ஆற்றினார்கள். தலைவரவர்கள் அரிய கருத்துக்கள் நிறைந்த முன்னுரையை நிகழ்த்தினார்கள். பின்னர் கீழ்க்காணும் அறிஞர்கள் சொற்பொழிவாற்றினார்கள்:

திரு. பண்டித மீ. கந்தசாமிப்புலவர் அவர்கள் - "திருக்குறள் இலக்கியம்" திருமதி. ஞா. சண்பகத்தம்மையார்

அவர்கள் - "திருக்குறளும் தமிழ்நாடும்" திரு.ச. கணபதி முதலியாரவர்கள், எம். ஏ. எல். டீ. - "மக்கள் உள்ளமும் திருக்குறளும்".

தலைவரவர்களின் கருத்துரையுடன் முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

பிற்பகல் மூன்றுமணிக்கு திருமதி. பாகீரதி அம்மையார், எம்.ஏ. அவர்களின் தலைமையின்கீழ் சைவ மங்கையர் மாநாடு தொடங்கியது. கீழ்க்காணும் அறிஞர்கள் விரிவுரையாற்றினார்கள்.

திருமதி கண்மணி ஸ்கந்தராஜா அவர்கள் - "ஈழத்துச் சிவாலயங்கள்" புலவர், க. மீனாட்சியம்மையாரவர்கள் - "முருகனும் மகளிரும்" திருமதி அ. கோசலையம்மையார் அவர்கள் - "சைவம் காத்த செல்வியர்." நமது சமாஜத் தலைவர்களுள் ஒருவராகிய சாத்தூர் வழக்கறிஞர் திரு. டீ.எஸ். கந்தசாமி முதலியாரவர்களுடைய படத்தைத் திரு. ம. பா. அவர்கள் திறந்துவைத்தார்கள். திருமதி. ஈசுவர வடிவம்மையாரவர்கள் - "அரசியார் தவநெறி". பற்றிப் பேசினர். மாநாட்டுத் தலைவியார் அவர்கள் மிக அழகான முறையில் தமது முடிவுரையைக் கூறினார்கள். மங்கையர் மாநாடு சரியாக 6-மணிக்கு முடிந்தது. கூட்டத்திற்கு வந்திருந்த தலைவர் கனம் சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தங்களுடைய உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்து, திருக்குற்றாலம், திருச்செந்தூர் முதலிய பகுதிகளை வணங்குவதற்காகப் பிரியாவிடை பெற்றுச் சென்றார்கள்.

பின்னர் சமாஜத் தலைவர் திரு. நல். முருகேசமுதலியாரவர்களின் தலைமையில் சைவர் மாநாடு நடந்தது. திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ.,பி.எல்., அவர்கள் "திருவெம்பாவை" என்னும் பொருள்பற்றியும், திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் அவர்கள் எம்.ஏ. "அரசும் அறநெறியும்" என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். தலைவரவர்களின் கருத்துரையின் பின் இரவு 9-மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

## மூன்றாம்நாள்

27—12—54 காலை 8-30மணிக்குச் சைவ இளைஞர் மாநாடு திரு. C. இராமலிங்கம், எம். ஏ. அவர்களின் தலைமையில்

கூடியது. கீழ்க்காணும் அறிஞர்கள் பேசினார்கள் : திரு. வீர. சிவசுப்பிரமணியம் அவர்கள் - "இளைஞர் சமய வாழ்வு", திரு. வித்துவான் நயினார் முகம்மது அவர்கள் - "சேக்கிழார் புகழும் சைவ இளைஞர்கள்", திரு. ம. சி. நித்தியானந்தம் அவர்கள் - "லிங்கோத்பவம்", திரு. புலவர் முருகவேள் அவர்கள், பி.ஓ.எல். - "தேனூறு செஞ்சொற் றிருக்கோவை", திரு வித்துவான் இராச கோட்டியப்பப் பிள்ளை அவர்கள் - "பெரியபுராணப் பயன்", திரு. நல்லகண்ணுப்பிள்ளையவர்கள் - "கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்."

இளைஞர் மாநாட்டுத் தலைவரவர்களின் கருத்துச் செறிந்த முடிவுரையுடன் அன்றைய முற்பகல் நிகழ்ச்சி முடிவுற்றது.

பிற்பகல் 4-மணிக்குச் சைவர் மாநாடு ஆரம்பித்தது. திருநெல்வேலி இந்து கல்லூரித் துணைத்தலைவர் திரு. வீ. பொன்னுசாமிப்பிள்ளை எம். ஏ. எல். டீ. அவர்கள் தலைமை தாங்கினார்கள். கீழ்க்காணும் அன்பர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்:

திரு. வித்துவான். ஔவை சு. துரைசாமிப்பிள்ளையவர்கள் - "சித்தாந்த சாரம்", வித்வான் திரு. இ. பகவதிப் பெருமாள் பிள்ளையவர்கள் - "திருஞானசம்பந்தரும் சிவஞான போதமும்", திரு. டாக்டர் மா. இராசமாணிக்கம் எம்.ஏ.,எம்.ஓ.எல்.,பீஎச்.டி., அவர்கள் - "சைவமும் கல்வெட்டுக்களும்", தலைவர் அவர்கள் "கல்லூரிகளில் சமய போதனை" என்னும் பொருள்பற்றிப் பேசி, சொற்பொழிவுகளைப் பற்றிய தம் கருத்துரையைக் கூறி முடித்தார்கள்.

திரு. மறை. திருநாவுக்கரசு அவர்களால் கீழ்க்காணும் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டுப் பேரவையில் ஏகமனதாக நிறைவேறின.

1. ஆலயங்களில் வழிபாடுகள் தமிழிலேயே நடைபெறவேண்டும்.

2. அரனடி அடைந்த சித்தாந்தச் செல்வர்கள் - டீ. எஸ். கந்தசாமி முதலியார், ந. சிவகுருநாதப் பிள்ளை, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், கவிமணி தேசிக

விநாயகம் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஆகிய ஐவர் மறைவுக்கு அனுதாபம்.

மாநாட்டு வரவேற்புக்குழுச் செயலாளர் திருமதி தில்லைக்காமாட்சி அம்மையார் மாநாட்டுக்குதவி செய்த பலரைக் குறித்துப் பாராட்டி நன்றி பகர்ந்தார்கள். சென்னை சைவசித்தாந்த சமாஜத்தின் சார்பில் திரு. வீர. சிவசுப்பிரமணியம் அவர்கள் மாநாட்டுத் தலைவர்கள், சொற்பொழிவாளர்கள் முதலிய எல்லோருக்கும் நன்றி கூறினார்கள். நால்வர் வழிபாட்டுக்குப் பின்னர் சிவநாம முழக்கத்துடன் சைவர் மாநாடு இனிது நிறைவேறிற்று.

மூன்று நாட்களிலும் சொற்பொழிவுகளுக்கு இடையிடையே திரு. ஆவுடையப்பப் பிள்ளை, திருமதிகள் - அ. கோசலை அம்மையார், ஈசுவரவடிவம்மையார், இராசம்மாள் முதலியோர் தேவார, திருவாசக, திருப்புகழ்கள் பாடிக் கூட்டத்தினர்க்கு இன்னிசை விருந்தளித்தார்கள். வெளியூர் அன்பர்கள் உணவு, உறைவிடம் முதலியன பால குருகுலத்தில் மிகவும் நல்லமுறையில் அமைக்கப்பெற்றிருந்தன. மாநாட்டுப் பந்தலுக்குப் போகவர மோட்டார் வசதிகள் செய்யப்பட்டிருந்தன. சாரணர், தொண்டர் இவர்கள் நன்கு சேவைபுரிந்தனர்.

## அடுத்த ஆண்டுவிழா

சமாஜத்தின் 50-ஆம் ஆண்டு நிறைவுப் பொன் விழாவை சிதம்பரத்தில் நடத்த திருவாளர்கள் இரத்தினசாமி செட்டியார், சின்னையா முதலியார் முதலிய அன்பர்கள் இசைந்திருப்பதாகத் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் பேரவையில் தெரிவித்தார்கள். சமாஜத்தின் சார்பில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் அவ்வழைப்பை ஏற்றுக்கொண்டார்கள்.

மூன்று நாட்களிலும் வெளியூர், உள்ளூர் அன்பர்கள் திரளாக வந்திருந்து சொற்பொழிவுகளைக் கேட்டுப் பேரானந்தம் அடைந்தார்கள்.

வாழ்க தமிழ்! வளர்க நம் சைவம்!

---

# சைவர் மாநாட்டுத் தலைமையுரை

ஸர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள்

சைவப் பெருமக்களே! சகோதர சகோதரிகளே!

இறை அன்பிலும், தமிழ் அறிவிலும், சமய சாஸ்திர ஆராய்ச்சியிலும் தலைசிறந்த பலரைக் கொண்டுள்ள இந்த மகாநாட்டிற்குத் தலைமை தாங்கும் பெருமையை எனக்கு விரும்பியளித்த சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் வரவேற்புக் குழுவுக்கு எனது மனமார்ந்த நன்றியும் வணக்கமும் முதலில் உரித்தாகுக. சென்ற ஆண்டில் உங்கள் அன்பு அழைப்பு வந்தபோது, உத்தியோகத் தொடர்பாலும் வேறு சில காரணங்களாலும் நேர்ந்த தடைகளை விளக்கி என்னை மன்னிக்குமாறுவேண்டினேன்; மன்னித்துவிட்டீர்கள். அப்படி மன்னித்ததுடன் உங்கள் அன்பு மறையவில்லை. அதே அன்புக் கட்டளை தொடர்ந்து இந்த ஆண்டிலும் வந்துவிட்டது. இரண்டாவது கட்டளையை மறுத்தற்கு அஞ்சியே நான் இன்று உங்கள் முன்பு நிற்கிறேன்.

இவ்விழாவில் தலைமை வகிக்கும் தகுதி வாய்க்கப் பெறேனாயினும் தங்களின் அழைப்பு எல்லாம் வல்ல அம்மையப்பரின் கட்டளை எனநினைந்து "நாமேை இதற்கு நாயகமே" என்ற முறையில் இப்பதவியை ஏற்றுக்கொண்டேன். ஆகையால் அன்பர்களே! இதற்குமுன் நடந்துள்ள பல மகாநாடுகளில் கேட்டுள்ள தலைமைப் பேருரைகளுக்கும் அடியேனின் சிற்றுரைக்குமிடையே சில வித்தியாசம் காண்பீர்கள். எனது பேச்சிலுள்ள குற்றங் குறைகளை மன்னித்துக் குணத்தை மாத்திரம் ஏற்றுக்கொள்ளுமாறு உங்களைப் பணிவுடன் கேட்டுக்கொண்டு மேற்செல்கிறேன்.

இந்த மகாநாடு கூடுமிடம் பெருமைவாய்ந்த பாண்டி நாட்டைச் சேர்ந்த விருதுநகர். பாண்டிநாட்டை எண்ணியதும் மதுரையில் சங்கம் இருந்து தமிழ் வளர்த்த காட்சியும், மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனாரும் திருஞானசம்பந்தப் பெருமானை அழைத்து சைவம் தழைக்கச் செய்த காட்சியும் பளிச்சென்று நமது கண்முன் தோன்று

கின்றன. சமாஜக் காரியதரிசியின் கடிதத்தில் விருதுநகர் என்ற பெயரைக் கண்டதும், எனக்கு உடனே ஞாபகத்திற்கு வந்தது எமது ஞானசம்பந்தர் 'விருது' என்ற சொல்லுக்கு முதலிடம் கொடுத்த ஓர் சந்தர்ப்பமேயாம். இராமேச்சுவரத்தில் தங்கியபடியே "மாவும் பூக்மும் கனியுநெருங்கு மாதோட்ட நன்னகர் மன்னித் தேவி தன்னொடும்" வீற்றிருந்த திருக்கேதீச்சர நாதனை அகக்கண்ணால் கண்டு வழிபட ஆர்வங்கொண்ட சீர்காழி வள்ளல் அப்பெருமான்மீது தாம்பாடிய தேவாரப் பதிகத்தை "விருது குன்ற" என்று ஆரம்பித்துள்ளார். திரிபுரத்திலுள்ளவர்கள் பெற்றிருந்த விறுகெட எம்பெருமான் மேருவை வில்லாக எடுத்தார் என்பது அப்பாட்டிலடங்கும் வர்ணனை. ஆனால் உங்கள் நகரமோ 'விருது' என்ற சொல்லை அடைமொழியாகப் பெற்று, அதற்குப் பொருந்த சென்னை மாகாணத்திற்கு முதலமைச்சரை அளித்த பெருமையுடன் தலை நிமிர்ந்து நின்று இன்று வெற்றி முரசு ஒலிக்கின்றது. சைவசித்தாந்த சமாஜ மகாநாடு இம்முறை இங்கேகூட நேர்ந்ததும் அந்த 'விருது' காரணமாகவே என்று கூறுதல் மிகையாகாது என நம்புகிறேன்.

பண்டை நற்றவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி செய்த தவநெறிச் செல்வர்களால் 49 ஆண்டுகளுக்குமுன் தோற்றுவிக்கப்பட்ட இந்தச் சைவசித்தாந்த சமாஜமானது "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற குறிக்கோளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிச் சைவசமயத்தைப் பல்லாற்றானும் பரிபாலித்துப் பாதுகாத்து வரும் அருந்தொண்டு ஈழத்தில் யாவரும் அறிந்த விடயம். முற்காலத்தில் அரசர்களும் சைவமடங்களும் செய்துவந்த சைவப் பணியை எமது சைவசித்தாந்த சமாஜம் இக்காலத்திற்கு ஏற்றமுறையில் செய்துவருகின்றதென்று கூறின் அது மிகையாகாது. இதைப்பற்றி நாமெல்லாரும் பெருமிதமடைகின்றோம்.

## ஈழநாட்டுடன் சமாஜத்தின் தொடர்பு

இச்சமாஜம் தோன்றியநாள் முதல் இது ஈழநாட்டுடன் தொடர்பை வளர்த்துக்கொண்டே வந்தது. எங்கள் நாட்டில் தனிப்பெரும் அரசியல் ஞானியாக விளங்கியுள்ள

சைவசிகாமணி சர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களே இதன் முதலாம் ஆண்டுவிழா சிதம்பர க்ஷேத்திரத்தில் நடந்தபோது அதற்குத் தலைமை வகித்தார். ஆறுமுக நாவலரின் பரம்பரையைச் சேர்ந்த பேரறிஞர்கள் ஈழத்தினின்றும் போந்து சமாஜ ஆண்டு விழாக்களிற் கலந்தும் தலைமை வகித்தும் விழாக்களை இனிது நடத்தினார்கள். ஈழநாட்டின் பெருமையைப்பற்றி முன்பு போந்த அறிஞர்கள் கூறியிருப்பினும் அவர்கள் கூறாத சில விசேடங்களை இப்பொழுது கூறுவது பொருத்தமா யிருக்குமென்று எண்ணுகின்றேன். சைவசித்தாந்த சாஸ்த்ர நூல்களுக்கெல்லாம் முற்பட்டதாகிய திருமந்திரத்தில் திருமூல நாயனார் இலங்கையைச் சிவபூமியென்றும் குறிப்பிடுகின்றார். இராவணனும் ஒரு சிறந்த சிவ பக்தனென்பது திருஞானசம்பந்தப் பெருமானால் ஒவ்வொரு பதிகந்தோறும் கூறப்பட்டிருக்கிறது. இராவணன் மனைவியாகிய மண்டோதரி கன்னிப் பிராயத்திற்றானே சிவபக்தி முதிர்ந்தவளாய்ச் சிவபிரானைத் தியானித்து நோற்றாளென்பது மணிவாசகப் பெருமானால் நன்கெடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இதனைப் பின் வருமிரண்டு பாட்டாலுமறிக.

“ ............எங்கள் பரமன் பெருந்துறை ஆதி, அந்நாள்
உந்து திரைக்கடலைக் கடந்தன்றோங்கு மதிலிலங்கை அதனிற்,
பந்தணை மெல்விரலாட்கருளும் பரிசறிவார் எம்பிரானாவாரே ”

—திருவார்த்தைப் பதிகம்

“ ஏர்தரும் ஏழுலகேத்த எவ்வுருவுந் தன்னுருவாய்
ஆர்கலி சூழ் தென்னிலங்கை அழகமர் வண்டோதரிக்குப்
பேரருளின்ப மளித்தபெருந்துறை மேயபிரானைச்
சீரிய வாயாற்குயிலே தென்பாண்டி நாடனை கூவாய் ”

—குயிற்பத்து

இத்தன்மைய சிவனடிப் பேர் அன்பு ஈழத்தில் இராவணன் காலந்தொட்டு இன்றுவரை உண்டு என்பதும் இனிமேல் என்றென்றைக்கும் இருக்குமென்பதும் எனது திடமான நம்பிக்கை.

## சிவ வழிபாட்டின் தொன்மை

மெய்கண்ட சாஸ்திரங்களைப் பற்றியோ சிவாகம தத்துவங்கள் குறித்தோ உங்களுக்கு எதுவும் எடுத்துக் கூற யான் விரும்பவில்லை. தேவார திருவாசகங்களின்மூலம் எனக்குக் கிடைத்துள்ள சைவசமய விளக்கத்தை மாத்திரம் சிறிது எடுத்துரைக்க விரும்புகிறேன். சைவம் சிவத்தோடு சம்பந்தமுடையது; மங்களம், அன்பு, இன்பம் இவையே சிவமாகும். சிவவழிபாடு எங்கே எப்போது எவரால் ஆரம்பிக்கப்பட்டதென்று ஆராய்ச்சியுலகு நிச்சயமாகக் கூறமுடியாத நிலையில் உள்ளது. சரித்திர காலத்தை அது கடந்து நிற்கின்றது. சைவம் உலக சமயமாய் ஒரு காலத்தில் இருந்ததென்ற உண்மை சென்ற ஐம்பதுஆண்டுகளில் உலகின் வெவ்வேறு தேசங்களில் நடந்த புதைபொருளாராய்ச்சிகள்மூலம் வலுப்பெற்று வந்துள்ளது. மொகஞ்ஜதாரா, ஹறப்பாவில் மாத்திரமல்ல, மால்டா (Malta) கிறீட் (Crete) மெக்சிகோ (Mexico) வேல்ஸ் (Wales) முதலாய இடங்களிற்கூட அதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன; மேலும் மேலும் கிடைத்து வருகின்றன.

சைவம் நிலவிய இடங்களைப்பற்றிய ஆராய்ச்சியை விடுத்து, அது தோன்றிய காலத்தைக் கணிக்க முயலும் போது மிகவும் அற்புதமான உண்மைகள் நமக்குத் தெரிய வருகின்றன. அவற்றுள் முக்கியமான ஒன்றை, திருவிளையாடற் புராணம், கடைசி படலமான அருச்சனைப் படலத்தின் இறுதிப் பாடல்கள் நான்கில் காண்கின்றோம். நுட்பமான ஒரு பெரிய ஆராய்ச்சிக்கு ஆதரவளிக்கும் அரிய விடயங்கள் இப்பாடல்களில் அடங்கியுள்ளன. சிவலிங்கத்தில் மூர்த்தியாய் வந்துநின்ற சிவபெருமான் திருவார்த்தை இங்கே மிளிர்கின்றது. குறித்த நான்கு பாடல்களில் இரண்டாவது மூன்றாவது பாடல்களை மாத்திரம் இங்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

> "சிறந்தவருள் சாரங்குற முனியைவரு
> கென்றுகாஞ் சிரமேல் வைத்துப்
> புறந்தடவி யெமையொப்பாய் நீயேகின்
> கற்புடைய பொலங்கொம் பன்னாள்

அறந்தழைய முறைமையொப்பா ளாதலினு
லுமையொப்பா ரகிலத் தியாரே
சிறைந்த தவம் புரிந்தோனும் தவத்துறுதி
பெற்றேனு நீயே யன்றோ"

நிறைவான தவம்புரிந்து அத்தவத்தில் உறுதிபெற்ற அகத்தியரதும், அவரது மனைவியரான உலோபாமுத்திரையினதும் மகிமை சிவபிரான் வாக்காகத் தரப்பட்டுள்ளது. ரிஷிபுங்கவர்களுள் முதலிடத்தை அவருக்கே கொடுக்கிறார் சிவபிரான். அத்தோடு சிவனும் சிவஞானியும் ஒன்றே யென்ற அரிய உண்மையும் தரப்பட்டுள்ளது.

இனி அடுத்த பாடலையும் பார்ப்போம் :

"உனக்கரிய வாமினிபாங் தருவதெவ
னுனக் கரிதா வொன்றுங் காணேம்
எனக்கருணை செய்திலிங்கத் திடையிச்சை
வடிவாய்ச் சென் றிருந்தானாகத்
தனக்கரிய வாநல்குஞ் சிவலிங்கந்
தன்பெயராற் றாபித்தான் றன்
இனக் கருணை வசிட்டாதி முனிவர்களுந்
தம் பெயரா லிலிங்கங் கண்டார்"

இப்பாடலில் சிவபெருமான் சிவலிங்கத்திடைச் சென்றமர்ந்த விதமும், அகத்தியர் நன்றியுணர்ச்சியுடன் சிவலிங்கம் ஸ்தாபித்ததும், அதைக்கண்ட வசிட்டர் முதலியோர் அப்படியே செய்ததும் விளக்கப்பட்டுள்ளன. நாம் அறிந்த சரித்திர காலத்தில் திருவொற்றியூரில் பட்டினத்தடிகளும் சிருங்கேரியில் வித்தியா சங்கரரும் இலிங்கவடிவெய்தியது எவ்வளவு பழைய சம்பிரதாயத்தைப் பின்பற்றியதென்பதைக் காண்கின்றோம். அதனோடு, இன்றும் மகான்களின் மகாசமாதிக்குமேல் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யும் வழக்கத்தின் அடிப்படையான கருத்தையும் உற்று நோக்குக.

பரஞ்சோதி முனிவர் ஒரு அருட்கவி. அவர் சிவஞானி மாத்திரமன்றி விஞ்ஞானியுமாவர். திருவிளையாடற் புராணப் பாயிரத்தில் சிவசக்தி, சபாபதி, தக்ஷிணாமூர்த்தி முதலாய தெய்வங்கள்மீது அவர் பாடியுள்ள தோத்திரங்

களைத் துருவி ஆராய்ந்தால் இந்த உண்மை நன்கு விளங்கும். அவர் குறுமுனியென அமைந்த அகத்தியருக்கு கும்பமுனியென்ற மறு பெயருமுண்டு. அப்பெயர் கும்பத்தில் அவதரித்த காரணத்தால் வந்ததெனவும், கும்பலக்கினத்தில் பிறந்ததால் பெற்ற பெயரெனவும் ஆன்றோர் கூறியுள்ளார்கள். வானூல் சாஸ்திரத்தின்படி காலத்தினைக் கவனித்த சில அன்பர்கள் அகத்தியர் கும்ப அயனாம்ச காலத்தில் வாழ்ந்திருக்கக்கூடுமெனக் கருதுகின்றனர். வானூல் சாஸ்திரத்தில் மிகவும் நுட்பமான கணிதம் அயனாம்சத்தைப்பற்றியது. Precession of the equinoxes அஃதாவது விஷுவத்திய ரேகையையும் சூரிய பாதையும் சந்திக்கும் இடத்தின் இடப்பக்கப் பெயர்ச்சி. இது 71 வருடங்களில் ஒரு பாகையாகப் பின்செல்லுகின்றதென்ற பெரும் உண்மையை நவீன மேனாட்டு வானூல் விற்பன்னர்கள் இந்த நூற்றாண்டில்தான் கண்டு பிடித்தார்கள். ஆனால் பழைய இந்துக்கள் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னேரேயே, எவ்வித புறக்கருவியின் உதவியுமின்றி இந்தக் கணிதத்தை நன்கு அறிந்திருந்தார்கள். முப்பது நாள் கொண்ட மாசத்தையும், பன்னிரண்டு மாசங்கள் கொண்ட வருடத்தையும் கலந்து வைத்ததுபோலவே, அவர்கள் 2140 வருடங் கொண்டதையும் அயனகதிரீதியாகக் கணித்தனர். அதன்படி 25585 வருடங்களுக்கு ஒரு முறை அயனமானது ஆகாயமண்டலத்தில் குறித்த ஓர் பாகையில் நடக்குமென்பது அவர்களின் முடிவு. அன்பர்களே ! என்ன அற்புதமான உண்மை இது; மறுபடியும் அதே பாகையில் அயனம் நடக்கப் போகும் காலத்தை உலகம் இன்று எதிர்பார்த்து நிற்கின்றது. ஓர் பிரளயத்தையோ புதுயுக ஆரம்பத்தையோ அது குறிப்பதென்பதே நமது மூதாதையரின் அனுபவத்தில் ஏற்பட்ட உண்மை. உமா தேவியாரது கல்யாண காலத்து இமயமலை தாழ, பூமியைச் சமப்படுத்த அகத்தியர் தென்திசைக்குச் சிவபெருமானால் அனுப்பப்பட்டாரென்ற புராணக் கதையில் அடங்கியிருப்பதும் இவ்வித அயனகதத்தில் நிகழ்ந்த நிலைப் பெயர்ச்சி, வெள்ளப்பெருக்கு, பூகம்பம் முதலியவையேயாம். அருணாசலம் போன்ற தென்னாட்டுப் பழைய மலைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இமாசலம் ஓர்

பச்சைக் குழந்தை என்கிறார் நிலநூல் வல்லுனர் (Geologists). 'எ' து அலைந்து திரியும் கண்டங்கள்' (The wandering continents) என்பது போன்ற நூல்களில் இதன் விளக்கம் காணலாம். தலைச்சங்கமிருந்த தென் மதுரை கடல் கொள்ளப்பட்டது, இற்றைக்குப் பன்னீராயிரம் வருடங்களுக்கு முன் என்கின்றனர் சில ஆராய்ச்சியாளர். அட்லாண்டிக் சரித்திரமெழுதிய எலியட் என்னும் ஆங்கில அறிஞர் பொஸிடோனிஸ் முதலிய தீவுகளை அழித்த பிரளயம் நடந்த கால எல்லையையும் அதே விதமே கணித்துள்ளார்கள். இந்த எண்ணிக்கை அயன கதியின் சரி அரை வட்டத்தைத் தழுவி நிற்பது கவனிக்கத் தக்க விடயம். எனவே இவர்கள் கணித்த கால 'எல்லைக்குப் பன்னீராயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே கும்பமுனி வாழ்ந்திருக்கவேண்டுமெனவும் அவரால் ஆரம்பித்த சிவலிங்க வழிபாடு இற்றைக்கு 24000 வருடங்களுக்கு முன்னரே யெனவும் கணித்தல் தவறாயிராது. இது மேலும் ஆராய்ச்சி செய்யவேண்டிய விடயம் ஆகையால் இத்துடன் நிறுத்தி மேற் செல்கிறேன்.

## சித்தர்களும் சமயாசாரியர்களும்

சைவம் சிவத்தோடு சம்பந்தப்பட்டிருப்பது போலவே, அது தமிழோடும் தமிழ் நாட்டோடும் தொன்று தொட்டுத் தொடர்புடைத்து. எங்நாட்டவர்க்கும் இறைவனான சிவன் தென்னாட்டையே சொந்தமாக உடையவனும். இத்தென்னாட்டில்தான் அவன் சித்தன் என்ற திருநாமத்தைப் பெற்றிருக்கிறான். 'சித்தனே திருவாலவாய் மேவிய அத்தனே', 'சித்தனைத் திருவண்ணாமலை யானை' என்பவைபோன்ற நால்வர் வாக்குகள் மூலம், சிவன் எல்லாம் வல்ல சித்தனான உண்மையும், அவனுக்கும் மதுரை, திருவண்ணாமலை போன்ற புராதன தலங்களுக்குமுள்ள நீங்காத தொடர்பும் நன்கறியக்கிடக்கின்றன. அந்தச் சிவன்பால் சித்தத்தை வைத்து, சித்தி பெற்றுச் சிவலோகங் கண்டவர்களே சித்தர்களென அழைக்கப்பட்டனர். அவர்கள் வாழ்ந்த பூமி அக்காலத்தில் நாவலந்தீவென வழங்கியதென்கிறார் தமிழ்ப் பேரறிஞரும், 1943ல் இந்த மகாநாட்டிற்குத் தலைமை தாங்கிய சைவப் பெரியாருமாகிய காலஞ்சென்ற திரு. வி.

கலியாணசுந்தர முதலியார் அவர்கள். இப்போதுள்ள பரத கண்டம் அந்த நாவலந்தீவின் ஓர் பாகம் மாத்திரமே யென்பது அவர்கண்ட ஆராய்ச்சி முடிவு

சித்தர்கள் அநுபூதியில் கண்ட முடிவுதான் பின்னளில் சைவ சித்தாந்தமாக மலரத் தொடங்கியதெனலாமென்று ஒரு சில சாரார் கூறுகின்றனர். வேதாந்த சித்தாந்த வேற்றுமைகள் வீண் குதர்க்க வாதங்கள் அவர்கள் காலத்தில் இருந்ததாக அறியோம். அச்சித்தர் மரபில் கிறிஸ்து சகாப்தத்தின் முற்பகுதியில் வாழ்ந்த திருமூலர் வாக்கால் இந்தக் கருத்தைக் காணலாம். 'சித்தர்கள் யாவர்?' என்ற கேள்விக்கு அவர் கொடுத்துள்ள விடையே அதி அற்புதமானது. 'சித்தர் சிவலோகம் இங்கே தெரி சித்தோர்,' 'சித்தர் சிவத்தைக் கண்டவர்' என்பவை அவர் மணி வாக்குகள். 'சிவஞானி தரிசனமே சிவத்தைக் காணல்' என ஆரம்பிக்கும் திருமந்திரத்தையும், அகத்தி யரின் மகிமை குறித்த திருவிளையாடற் புராணப் பாட்டை யும் ஒப்பிட்டுப் பார்த்து அவற்றின் கருத்தொற்றுமையை ஆராய்தல் நன்று. சைவத்தை, சுத்தசைவம், அசுத்தசைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் எனத் திருமூலர் வகுத்த திறனையும், அதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு படிகளைக் காட்டி அவற்றை முறையே தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க் கம், சன்மார்க்கம் என அவர் விளக்கியுள்ள சிறப்பையும் கருத்தூன்றிப் படிக்கும்போதுதான், நாளடைவில் எவ் வளவு வீண் விவாதங்களைக் கிளப்பிச் சிலர் தம்வாழ்நாளை வீணுக்குகின்றனர் என்பது புலப்படும்.

சமுதாய வாழ்வில் பழந்தமிழரின் பண்பாடு 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்று சிறப்புற்றிருந்தது. அந்த இலட்சியத்தையே திருமூலர் சமய வாழ்விலும் மிளிரச் செய்து, 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' எனப் பாடிச் சென்றார். அவர் போதித்த அன்பு நெறியாம் சைவத்தின் நான்கு பாதைகளையும் தமது வாழ்க்கையாலும் வாக்காலும் விரித்துரைக்கத் தோன்றியவர்களே சைவ சமயாசாரியர்கள் நால்வரும் ஆண்டான் அடிமைத்திறத்தை விளக்கும் சரியை மார்க்கத்தைப் பேணியவர் அப்பர்; சம்பந்தரும் சுந்தரரும் கிரியையும் யோகத்தையும் வாழ்ந்து

காட்டினர்; மாணிக்கவாசகர் ஞான நெறியான சன்மார்க்கத்தில் நின்று சாயுச்சியபதம் பெற்றவர். இவர்கள் சிறப்பாக ஒவ்வொரு பாதையைக் காட்டிய (வற்புறுத்திய) போதிலும், பொதுமுறையில் நான்கு நெறிகளையும் பேணியவர்களேயாம். உதாரணமாக, 'நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு, புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு' என்று சரியையையும், 'சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்', 'உந்நாமம் எந்நாவில் மறந்தறியேன்' எனக் கிரியையும் போற்றியுள்ள அப்பர் சுவாமிகளே,

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீரமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே"

என அகவழிபாடான யோக மார்க்கத்தையும்,

"மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையு மன்றே"

என்று யோகத்தின் மேலான ஞான நெறியையும் மிகவும் அழகாய் விரித்துரைத்துள்ளார்.

இரண்டாவது படியான கிரியையில் நின்று சற்புத்திர மார்க்கத்தை விளக்கிய சீகாழி வள்ளலின் 'சம்பந்தன்' எனும் திருப்பெயரிலும், அவர் பாடிய முதற்பதிகத்தின் முதலாவது பாட்டாகிய 'தோடுடைய செவியன்' எனவரும் தேவாரத்திலும் மிகவும் நுட்பமான ஞானக் கருத்துக்களைக் காணலாம். திருஞானமென்னும் இறை ஞானத்துடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள விரும்புவோர் யாவர்க்கும் அவர் வழி காட்டியுள்ளார். என்பதை 'சம்பந்தன்' என்னும் பெயர் தருகின்றது. அஃதாவது சிவஞானம், சிவானந்தம் இரண்டிற்கும் தாம் உரிமை பூண்டிருப்பதோடு, பிறர்க்கும் அவற்றை உணர்த்தி உரிமை செய்விக்கும் மாட்சியுடையவர் என்பதாம். இந்த அரிய இரு கருத்துக்களும் அவர் அருளிய முதல் தேவாரத்தில்

வரும் 'உள்ளங் கவர் கள்வன்' 'பெம்மான் இவனன்றே' என்ற சொற்றொடர்களில் அமைந்திருப்பதைக் காண்க. சம்பந்தர் அருளிய பதினாயிரம் பாடல்களையும் பயின்று, அவரைப் போலவே அதே தொகையான பாடல்கள் இயற்ற விரும்பி 'புகலியில் வித்தகர் போல அமிர்த கவித் தொடை பாட அடிமை தனக்கருள்வாயே' என்று விண்ணப்பித்த அருணகிரிநாதர் சம்பந்தப் பெருமான் செய்த அற்புதங்களை யெல்லாம் முருகக் கடவுளின் லீலைகளாகவே பாராட்டிப் பாடியுள்ளார். அவருக்குப்பின் "வெம்பந்தந் தீர்த்து உலகாள் வேந்தன் திருஞானசம்பந்தனை யருளாற் சாருநாளெந்நாளோ?" என உருகி அழுத தாயுமானவர் அவரை உலக குருவெனப் பாவித்தே பூசித்தார்.

நமது சோபான மார்க்கத்தின் மூன்றுவது படியான யோகத்தை விளக்க வந்தவர் சுந்தரர். 'தம்பிரான் தோழர்' என்னும் பெயருக்குப் பொருந்த அவர் சகமார்க்கத்தில் நின்றார். சிவபெருமான் கட்டளைப்படி திருக்கயிலையை விட்டு மண்ணுலகெய்தி யோகமும் சுத்த போகமும் கொண்ட திவ்விய வாழ்வு நடத்தினர்; தாம் அருளிய தேவாரப் பதிகங்கள் மூலம் செந்தமிழ்ச் சொல்லுக்குச் சிறப்பையும் ஆக்கத்தையும் சேர்த்தார். "தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது, தண்டமிழச் சொல்லோ? மறுபுலச் சொற்களோ சாற்றீர்" என்று பின்னாளில் ஓர் புலவர் பாடும் பெருமையை நம் தாய் மொழிக்குத் தேடி வைத்தார். ஆனால், அவரது அவதாரத்தின் முக்கிய நோக்கம் "மாதவஞ் செய்த தென்திசை வாழ்ந்திடத் தீதிலாத் திருத் தொண்டத் தொகை தர" என்னும் சேக்கிழார் வாக்கில் அடங்கியுள்ளது.

திருமூலர் பாடிய

"அடியார் அடியார் அடியார்க் கடிமைக்
கடியனாய் நல்கிட் டடிமையும் பூண்டேன்
அடியான் அருளால் அவனடி கூட
அடியார் இவனென் றடிமை கொண்டானே"

என்ற திருமந்திரம் சுந்தரர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருத்தல் வேண்டும். தெய்வ அருள் நூலாகவும்

துளிப் பெருங்காப்பியமாகவும் திகழும் பெரிய புராணத்திற்கு அவர் தன்னிகரில்லாத் தலைவராக விளங்குகின்றார். அவரது அளப்பரும் மகிமைக்கு இது ஒன்றே போதிய சான்றாகும். இரண்டு முக்கியமான உண்மைகளை அவரது வாழ்க்கையாலும் வாக்காலும் அறிகின்றோம்.

ஒன்று பண்டைத் தமிழ் மக்களிடையே பிறப்பால் எல்வித வேற்றுமையோ, உயர்வோ, தாழ்வோ இருக்கவில்லையென்பது. மறையவராகப் பிறந்தும், கணிகையர் குலத்திலும் வேளாளர் மரபிலும் சுந்தரர் மணஞ்செய்து கொண்டார். அவரது திருத்தொண்டத் தொகையில், மறையவர்களும் ஆதிதிராவிடரும் மன்னரும், மறவரும் வணிகரும் வண்ணாரும், வாணியரும், பாணரும் சரிசமான மான நிலையில் போற்றிப் புகழப்படுகின்றனர்.

இரண்டாவது உண்மை, அந்த அடியார் திருக்கூட்டத்தில், சுந்தரர் காலத்தவர் மாத்திரமன்றி, அவர் தோன்றிய தமிழ் நாட்டினர் மாத்திரமன்றி அவருக்கு முற்காலத்தவரும், எதிர்காலத்து வருவோரும், அன்னிய நாடுகளில் தோன்றியவர்களும் இனித் தோன்றக் கூடியவர்களும், சேர்க்கப்பட்டிருப்பதாகும். பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் இந்தியாவிலும் ஈழத்திலும் தோன்றிய மகான்கள் சகலரும் அத்திருக்கூட்டத்தில் சேர்ந்தவரென்று கொள்ளலாம். இந்த அருங்கருத்தை வைத்தே சுந்தரர் அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்' என்று பாடினார். இதனை விளக்க விரும்பிய சேக்கிழார்பெருமான், 'மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டுக்கப்பால், முதல்வனார் அடிச் சார்ந்த' என்று இடத்தால் அப்பாலாந் தன்மையையும், 'நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும் நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்' எனக் காலத்தால் அப்பாலாம் தன்மையையும் இருமையாகக் கூட்டியுள்ளார். கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார் அதே கருத்தை இன்னுந் தெளிவாக்கிப் பாடியுள்ளார். சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை தமிழ் மொழியில் வழங்கும் வரை, தமிழ் நாட்டில் சிவமணமும் அடியார் பெருமையும் கமழுமெனக் கூறிச் சைவத்தின் உச்சப்படியான ஞானத்தைப் போதிக்கும் சன்மார்க்கத் திற்குச் செல்ல விரும்புகிறேன்.

## சன்மார்க்கம்

சன்மார்க்கம் என்பது சத் மார்க்கமாகும். சத் என்றால் சத்தியம் அல்லது உண்மையெனப் பொருள்படும். உண்மை உள்ள இடத்தில் ஞானம் உண்டு. ஞானம் உண்டேல் அங்கே அன்பும் இருக்கும். இவற்றால் எய்துவது இன்பம். மாறுதலில்லாத உண்மை, அறிவு, இன்பமாய் இறைவன் உள்ளான். அவற்றுள் ஒன்று :

" சைவப் பெருமைத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு.
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்துள் ளார்க்கு வகுத்து வைத் தானே "

என்பதாம்.

அதே ஞானசித்தர்,

" குருபக்தி செய்யும் குவலயத் தோர்க்குத்
தருமுத்திச் சார்பூட்டுஞ் சன்மார்க்கந் தானே "

என்று சன்மார்க்கம் குருநெறி என்பதை மேலும் வற்புறுத்தியுள்ளார். அவர் தந்த இவ்விளக்கத்திற்கு நீண்ட விரிவுரை போல் மிளிர்வது திருவாசகம். 'சாத்திரத்திற்குத் திருமந்திரம் தோத்திரத்திற்குத் திருவாசகம்' என்ற பெரியோர் வாக்கு இத் தொடர்புபற்றியும் எழுந்திருக்க வேண்டும்.

'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற திருமூலர் வாக்குக்கும் 'தாம் இன்புறுவது உலகின்புறக் கண்டு, காமுறுவர் கற்றறிந்தார்' என்னும் வள்ளுவர் பொய்யாமொழிக்கும் ஒப்பற்ற இலக்கியமாய் நின்றவர் மாணிக்கவாசகப் பெருமான். அவர் பரபக்தி நெறியிலே, அதாவது ஞானத்தை அடிப்படையாய்க் கொண்ட சன்மார்க்கத்திலே நின்று தம் நெஞ்சை தம்மைக்குருந்த மரத்தடியின்கண் குருவடிவில் ஆட்கொண்ட பெருமானுக்கே அர்ப்பணமாக்கி, உளம் உருகவும், மெய் சிலிர்க்கவும் கண்களில் நீர் (ஆறுகப்) பெருகவும், கதறிக் கதறிப் பாடியுள்ளார். ஆரம்பத்தில் அப்பெருமான் அருளை

வேண்டி அழுதார்; இடையில் அவன் பிரிவாற்றுமையால் கதறினர்; அவன் ஆண்டுகொண்ட விதத்தை நினைந்து உருகினர்.

சிவனின் பழைய வரலாற்றுடன் ஆரம்பித்த திருவாசகத்தை, அச்சிவன் சிவனை தன்னைச் சிவமாக்கிக் கொண்ட வியப்பைவிளக்கும் அச்சோப் பதிகத்துடன் முடித்துள்ளார் மணிவாசகர். நன்றி உணர்ச்சிப்பெருக்கில் இறைவனை அப்பனாகவும், அம்மையாகவும், அண்ணலாகவும், ஐயனாகவும், உடையானாகவும், ஆதியாகவும், ஓங்காரத்தின் உட்பொருளாகவும் பாராட்டுகிறார் இக்கடைசிப் பதிகத்தில். வேதங்களின் ஞான பாகமான உபநிடதங்களின் அரிய கருத்துக்களும், (பழைய) சித்தர்கள் கண்ட உண்மைகளும், பழந் தமிழ் இலக்கியங்களின் கொள்கைகளும் திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளன.

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய, தெவிட்டாதினிக்கும் தேனினைப்போன்ற திருவாசகத்திலிருந்து எப்பாடலை எடுத்து விளக்குவது, எதை விடுவது எனத் தெரியாது மயங்குகிறேன். எனினும் சின்னஞ் சிறு வயசிலிருந்தே என்னுள்ளத்தைக் கொள்ளைக் கொண்ட இரண்டொரு பாடல்களையாவது உங்களுக்குப் படித்துக் காட்டாமல் மேற்செல்ல மனமில்லை.

நடுவு நிலைமை சைவத்தின் ஓர் அழகு. "வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பி" நின்று உய்யும் வழி தேடுவது யாவரும் அறிவர். "பூதலத்திறைவனேனே பொதுவற நடத்தி" அத்துடன் "வழுதி நீதி" நிகழ்த்தும் தகுதி வாய்ந்த மணிவாசகரோ, "செல்வ மென்னும் அல்லலிலும்" நல்குரவென்னுந் தொல்விடத்'திலும் பிழைப்பது போதாமல் "தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகி" சமய வளர்ச்சியைத் தொடங்குவதற்கு முன்னரே "கல்வியென்னும் பல்கடற்" பிழைப்பது அவசியமெனக் கூறியுள்ளார். "ஆறுகோடி மாயா சக்திகள் வேறு வேறுதம் "மாயையால் தாக்கப்பட்டபோது ஞானமில்லாக் கல்வியும் சாதனை இல்லாச் சமயப்படிப்பும் உதவா வென்பதுதான் அவர் முதலில் கண்ட உண்மை. இக் கருத்தையே சுட்டிச் சொல்லும் தன்மையுடைய பட்டினத்தார்,

" எட்டுத் திசையும் பதினாறு கோணமு மெங்குமொன்றாய்
முட்டித்ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாங்
கட்டிச்சுருட்டித்தங் கக்கத்தில் வைப்பார் கருத்தில் வையார் "

என்று சொல்லியது. படிப்படியாக ஏறி மணிவாசகர் பரம்பொருளைப் பட்டப்பகல்போல் அறிந்து, உணர்ந்து, சிக்கெனப் பிடித்து,

" வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே "

என்று போற்றினார். கண்டதும் சதா அடிமை பூண்டார். அதின் அழகைச் சொல்வது,

" கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர
எண்ணா திரவும்பகலும் நான் அவையே எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ அடிமைசால அழகுடைத்தே"

மண்மேல் யாக்கை விடுமாறும் வந்தவன் கழற்கே புகுமாறும் எண்ணக் கடமைகொள்வது ஏட்டுப்பூச்சிகளுக்கே யாகும். அன்றியும் அவரின் வேறோர் மனோநிலையில் தான் பெற்ற இன்பம் வையகம் பெறக் கிடைத்ததை இங்கு குறிக்கத்தக்கது :

" இன்றெனக் கருளி இருள் கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிது மற்றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றியொன்றில்லை
யாருன்னை அறியகிற் பாரே."

இந்த அறிவைத்தானோ புத்தபெருமான் நினைப்பற நினைந்தும் தமது தொண்டர்க்கு எடுத்துரைக்க இயலாது மௌனமாயிருந்தார், இதில் தற்கால விஞ்

ஞான சாஸ்திரத்தின்படி ஒரு பெரும் அணுத்தத்துவ நுட்ப அறிவு தெளிகிறது. இந்திய சாஸ்திரப்படி பஞ்சபூதங்கள் ஒன்ருயும் பலவாயும் சேரும் சேர்க்கையால் தோன்றும் சடப்பொருள்களெல்லாம் மேல்நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சியின்படி ஏறக்குறைய 90 தனித்தனி அணுக்களின் (elements) சேர்க்கை யென்றே சொல்லப் படும். மேல்நாட்டில் அணுவைப் பிளப்பது(splitting the atom) ஒரு புதிய வித்தை. அதனின்றும் எழுவது சடலத்தின் தன்மை மாறிய சக்தி மயம். ஒவ்வொரு அணுவும் இத்தன்மையதென்றும் அவைகளெல்லாம் பிளக்கப்பட்ட காலத்தில் எழும் சக்தி ஒரே தன்மையுடையதென்றும் தான், விஞ்ஞானத்தின் முடிபு கூறும். "பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர்" உலகங்களெலாம் ஈற்றில் "சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்ருகும்" உண்மையை உணர்ந்த எங்கள் மணிவாசகர் பெற்ற ஞானத்தின்மேல் வேறொன்று உண்டோ? என்ன ஆச்சரியம்! அவர் "நீருறு தீயே" என்று தண்ணீரில் நெருப்பிருக்கும் உண்மைக்கும் இப்போது கண்டு பிடிக்கப் பட்ட ஜலவாயுக் குண்டு (hydrogen bomb)க்கும் தொடர்ச்சி யில்லையென்று யாரால் மறுக்கமுடியும்? இதெல்லாம் சைவ முதல் அளவில் சமயமும் கடந்து மேற் சமயம் கடந்து மோன சமரசமும் கடந்து "உரையுணர் விறந்து நின்றுணர்வதோர்" உண்மை.

## சங்கரரும் சைவமும்

இதுவரையில் தமிழ் நாட்டில் தோன்றித் தமிழ்மொழி மூலம் சைவம் வளர்த்த நான்கு ஆசாரியார்களின் உபதேசங்களை ஒரு வகையில் பார்த்தோம். இனி, தமிழ்மக்களாம் சைவர்கள் நெடுங்காலம் மறந்துவிட்ட இன்னுமோர் ஆசாரியரைப் பற்றியும் சிறிது சிந்திப்போம். சுத்த தமிழரான ஆதிசங்கரரையே நான் இங்கு குறிப்பிடுகின்றேன். சைவம் சிறப்புற் றேங்கிய பழைய சேரநாட்டில் அவதரித்து, கன்னியாகுமரியிலிருந்து கைலாசம்வரைக்கும் சிவவழிபாட்டின் சிறப்பையும், பஞ்சாட்சரத்தின் மகிமையையும், விபூதி உருத்திராக்ஷத்தின் பெருமையையும், பரப்பிய அரும்பணி

அவருடையதாகும். அவர் அவதாரஞ் செய்திராவிட்டால், ஓர் காலத்துச் சைவ சமயத்தின் சிறப்புக் கிருப்பிடமான காஷ்மீரத்தில் இன்று நாம் சிவாலயங்களைக் காணமுடியாது. நேபாளம் போன்ற இமாசலப் பிரதேசங்களில் சிவலாயங்கள் நிறுவப்பட்டிருக்க மாட்டா. சங்கரர் அருளிய தோத்திர நூல்களுள் முதன்மை பெற்றுள்ள சௌந்தரியலகரியின் 75-ம் பாடலில் திருஞானசம்பந்தர் உமாதேவியாரிடமிருந்து ஞானப் பாலுண்ட மகிமை இடம் பெற்றுள்ளது. காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டும், நாட்டின் அன்றைய சமய நிலைக்குப் பொருந்தவும், சங்கரர் தமது சைவ மதப் பிரசாரத்தை சமஸ்கிருத மொழியிலேயே செய்த போதிலும் அவர் அப்பர், சம்பந்தர் இருவரின் தேவாரங்களிலும் மாணிக்கவாசகரின் திருவாசகத்திலும் நல்ல பக்திகொண்டவரென யூகிக்க இடமுண்டு. அவரது சமயத் தொண்டு சிவ வழிபாட்டை இந்தியாவின் நாற்றிசையிலும், முக்கியமாகத் தமிழ்மொழி வழங்காத பிரதேசங்களிலும் பரப்பியதுடன் நின்றுவிடவில்லை.

எழுபத்திரண்டு கிளைகள் கொண்டு வலுக்குன்றி, பூக்காது காய்க்காது, இழுக்குற்றிருந்த இந்துமதம் என்னும் கற்பக தருவை ஆறு கிளைகளோடு மாத்திரம் மறுபடியும் தழைத்துச் செழிக்கச் செய்த பெருமை சங்கரரைச் சார்ந்ததாகும். இக்காரணம் பற்றியே அவருக்கு ஷண்மத ஸ்தாபனாசாரியார் என்னும் திருநாமம் வந்ததாகும். இத்தொண்டின் தொடர்பில் சக்தி வழிபாட்டை, கேவலமான வாமாசாரப் பழக்க வழக்கங்களிலிருந்து விடுதலையாக்கி, புனிதமுறச் செய்தவிதம் மிகவும் அற்புதமானதாகும். தேவியை யந்திர - சக்கர வடிவில் வழிபடும் முறையை இன்று பல இடங்களிற் காண்கிறோம். இந்த முறையில் சிறப்புற்ற புராதன தேவி ஆலயங்கள் மூன்று-மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி, காஞ்சி காமாட்சி ஆகிய மூவரின் கோயில்களே அவை. முதல் இரு இடங்களிலும் சக்கரம் மூர்த்திகளுக்குக் கீழே இருக்க, காஞ்சியில் மாத்திரம் அது மூர்த்திக்கு முன்னே வைக்கப்பட்டுப் பூசிக்கப்பட்டுவருகிறது. இந்த வழக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் சங்கரர். காஞ்சி நகரம் பல மதத்தினரின் ஆதிக்கத்துக்கும் அவர்களின்

கலைவளர்ச்சிகட்கும், மாறிமாறி இடங்கொடுத்தபட்டினம். புத்தசமணக் கொள்கைகளும், அவற்ரோடு பின்னாளில் தொடர்புற்றிருந்த இழுக்கான மந்திர தந்திரச் சாதனை களும் காஞ்சியில் பரவியபோது, காமாட்சியம்மனின் கலை குறைந்ததோடு அது அகோரமாகவும் மாறிவிட்டது. இத னால் ஊருக்குப் பெருங் கேடு சூழ்ந்தது. சங்கரர் திக்கு விஜயஞ் செய்தபோது, அங்கே தங்கி தவஞ்செய்து, தேவி யின் கலையைப் பழைய உன்னதமான புனிதநிலைக்குமாற்றி வைத்தனர். அத்தொடர்பில் அவரால் ஸ்தாபிக்கபட்டனதே அங்கே நாம் இன்னும் காணும் அஷ்டலக்ஷ்மி பீடம். இந்த அரிய தொண்டை தமிழர்கள் மறந்து விடவில்லையென்ப தற்கு அறிகுறியாக, காமாட்சியம்மனின் ஆலயத்தில் சங்க ரரின் மூர்த்தியையும் அதற்கு நித்திய ஆதாரனை செய்யும் வழக்கத்தையும் காணலாம்.

சுருக்கிக் கூறப்புகின், திருமூலர் திருமந்திரத்தின் ஐந்தாம் தந்திரத்தில் அடங்கிய 28 சிவாகமங்களின் கருத் துக்களைத் தமது அரிய தேவார, திருவாசகப் பாடல்களின் மூலம் தமிழ் நாட்டில் பரவச்செய்தவர்கள் சைவசமயாசாரி யர்கள் நால்வரென்றும், அதே நூலின் நாலாந் தந்திரம் தரும் 77 சக்தி ஆகமங்களின் உட்பொருளை நன்குணர்ந்து, அவற்றை நடைமுறைக்குக் கொணர்ந்தவர் சங்கராச்சாரி யர் என்றும் கூறிவிடலாம். சித்தர் வாக்குகள் அவைகளைச் சித்த சுத்தியுடன் தியானித்துச் சித்திபெற்ற பக்தர்கட்கே விளங்குமன்றி, வெறும் புத்தகப் படிப்பாலும் அகராதி யைப் புரட்டுவதாலும் அறியக்கூடியனவல்ல. ஆகையால், சங்கரரும் திருமூலர்போல், தாயுமானர் போற்றிய வேதாந்த—சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணத்தைச் சேர்ந்தவரெனக் கூறுதல் மிகையாகாது. 1950-ம் ஆண்டில் கொழும்பில் நடந்த சைவ சித்தாந்த மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிய பன்மொழிப் புலவர் உயர்திரு. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் சங்கரரைப் பற்றிய பாராட்டு மொழிகள் சில கொழும்பிற் பேசி யதைக்கேட்டு மகிழ்ச்சியுற்றேன். சங்கரர் தமிழன் என்ற உண்மையை சைவசித்தாந்த சமாஜம்மூலம் சைவர்களாகிய

தமிழருக்கு முதன்முதலாக எடுத்துக்கூறிய தமிழ் மகன் அவரேயென எண்ணுகிறேன் அவரின் அந்த அரிய பாராட்டுதலைப் பின்பற்றியே யானும் இன்று உங்களுக்குத் தமிழ்நாட்டுச் சைவர்கள் மறந்துபோன சில உண்மைகளை எடுத்து விளக்கியுள்ளேன். (தொடரும்)

---

# முன்னுரை

சமாஜத் தலைவர்-ராவ்சாஹிப்- நல். முருகேச முதலியார்

மெய்யன்பர்களே !

திருவாலவாயான் திருவருளால் நம் சமாஜத்தின் 49-ம் ஆண்டு மாநாடு இன்று இங்கு கூடுகிறது. இம்மாநாடு முன் வருடங்களில் நடந்தவைகளைவிட ஒருவிதத்தில் மிகச் சிறப்புடையது. இது சைவ மங்கையர்களின் சமய உணர்ச்சியையும் செயலாற்றும் திறத்தையும் வெளிப்படுத்துகிறது. இம்மாநகரில் விளங்கிவரும் மாதர் மணிவாசக சங்கத்தார்கள் இம் மாநாடு இவ்வாண்டு இங்குக்கூட வேண்டுமென்று சென்ற ஆண்டு பரிவுடன் வேண்டினார்கள். அவ்வழைப்பு யாவர்க்கும் மகிழ்ச்சியைத் தந்தது. இது எதிர்கால சைவத்தின் வளர்ச்சிக்கு ஒரு நல்ல அறிகுறியாயிருக்கிறது. திருமதி தில்லைகாமாட்சி அம்மையாருக்கும் அவர்களுடனிருந்து வேலைசெய்யும் மங்கையர்களுக்கும் நம் நன்றி உரித்தாகுக. இம்மாநாடு மற்றொரு முறையிலும் சாலச் சிறப்புடையது. கனம் சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமைதாங்க இசைந்தது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. அறிவிலும், ஒழுக்கத்திலும், பதவியிலும், புகழிலும், சைவப்பற்றிலும் உயர்ந்த இப்பெரியாரின் தொடர்பு பலவித நலன்களை அளிக்குமென்பதில் ஐயமில்லை. நம் ஈழநாட்டுத் தமிழ்ப்பெரியார்களில் தலைசிறந்து விளங்கும் இவர் நம் சமாஜ மாநாடுகளில் முன்னர் தலைமைதாங்கின சர். பொன்னம்பலம் இராமநாதன், சர். கனகசபை, சபாரத்தின முதலியார் முதலிய சைவ மணிகளின் வரிசையில் இப்போது திகழ்பவர். யாழ்ப்பாணம்

சைவ பரிபாலன சபை, கொழும்பு விவேகானந்த கழகம், திருக்கேதீச்சுரர் ஆலயத் திருப்பணிக் குழு, கொழும்பு தமிழ்ச்சங்கம் முதலிய சபைகளுக்குத் தலைமையாயுள்ளவர். இவர் தலைவராக வாய்த்தது நமது பாக்கியமே. பக்தியிலும் நற்குணத்திலும் ஈடில்லாதவரும் தமிழர் பண்பாட்டுக்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குபவருமாகிய உயர்திரு சர். பி.டி. இராஜன் அவர்கள் இந்த மாநாட்டைத் திறந்துவைக்க இசைந்ததும், அறச் செய்கைகளில் தளராது ஈடுபடும் வள்ளல் உயர்திரு. கருமுத்துத் தியாகராச செட்டியார் அவர்கள் கொடியேற்றுதலைச் செய்ய இசைந்ததும் மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றன. இத்தகைய பெரியார்கள் ஒன்றுகூடி அவர்கள் ஆதரவில் இம்மாநாடு நிகழ்வது சைவர்களுக்குப் புத்துயிர் கொடுக்கும் என்று நம்புகிறேன். அடுத்த ஆண்டு நடக்கப்போகும் சமாஜத்தின் பொன் விழாவுக்கு இது அடிகோலினது போலும் ஆகும்.

இச் சமாஜம் 1905-ம் வருடம் திருப்பாதிரிப்புலியூரில் அருட்டிரு ஞானியார் சுவாமிகள் ஆதரவில் அவர் மடத்தில் நிறுவப்பெற்று முதல் மாநாடு தில்லையில் சர். இராமநாதன் அவர்கள் தலைமையில் நடந்தது. அதுமுதல் 49 ஆண்டுகளாக சித்தாந்தச் செந்நெறியைப் பரப்புவதற்கு இடைவிடாது வேலைசெய்து வருகிறது. தமிழ் வழங்கும் இந்நாட்டிலும் பிறநாட்டிலும் பல சைவ நிலையங்களுக்குத் தலைமையாக எண்ணத்தகும் இச்சமாஜம் பல சைவப் பெரியார்களின் தொடர்பால் மேன்மையடைந்திருக்கிறது. முதற் சில வருடங்களில் சித்தாந்த ஆராய்ச்சி வல்லுநர்களும் பேரறிஞர்களுமான அருட்டிரு மறைமலையடிகளாரும், திரு. ஜெ. எம். நல்லசாமி பிள்ளையவர்களும் பெரும்பணியாற்றிவந்தார்கள். பின்னல் பல ஆண்டுகள் செயலாளராக யிருந்தவரும் அரும் தொண்டாற்றியவருமான உயர்திரு ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் இன்றும் சமாஜத்திற்குப் பலவிதங்களில் உயிர்த்துணையாக இருந்து வருகிறார். இச்சமாஜம் ஆண்டுதோறும் மாநாடு கூட்டுவதுமின்றி, அப்போதைக்கப்போது தனிக் கூட்டங்களை நடத்திச் சைவத்தின் உட்பொருளை விளக்கி வருகிறது. திருமுறைகளையும் சித்தாந்த சாத்திரங்களையும் இன்னும் பல நூல்களையும் ஆராய்ச்சிப் பகுதிகள் முதலியவை

உடையனவாய் அடக்கவிலைப் பதிப்பாய் இதுவரை ஒரு இலட்சத்துக்கு மேலான பிரதிகளை வழங்கி வந்திருக்கிறது. 1912-ம் ஆண்டுமுதல் 'சித்தாந்தம்' என்ற மாதப் பத்திரிகையைச் செவ்விய முறையில் வெளியிட்டுவருகிறது. இப்பத்திரிகை சைவநூல் ஆராய்ச்சியை மிகவும் வளர்த்து வருகிறது. சைவநூற் பயிற்சியை வளர்ப்பதற்காக ஆண்டுக் கொருமுறை சைவநூல் தேர்தல் நடத்திவருகிறது. சில ஆண்டுகளிற் கோடை வகுப்புகளும் ஏற்படுத்தப்பட்டன. சென்ற வருடத்தில் சில சிவஸ்தலங்களில் மாதக் கூட்டங் களும் ஏற்படுத்தப்பட்டன. பெங்களூரில் சில சொற் பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டன. சைவர்கள் பேராதர வைக்கொண்டு செய்யவேண்டிய ஆக்கவேலைகள் இன்னும் பல இருக்கின்றன. அவைகளைச் சென்ற ஆண்டு என் முன்னுரையில் விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறேன். அவைகளில் ஒன்றிரண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டன. முக்கியமாக சைவ சமயாசாரியார்களின் திருநட்சத் திரங்களையும், மெய்கண்டார் திருநட்சத்திரத்தையும் சமாஜத்தின் வேண்டுகோளுக்கிணங்கிப் பலவிடங்களிற் கொண்டாடப்பட்டன. அருட்திரு பாம்பன் சுவாமிக ளியற்றிய சித்தாந்த நூல்களில் ஒன்றிரண்டிற்கு மறு பதிப்பு வேலை துவக்கப்பட்டது. அரிய சைவ நூல்களை வெளியிடுதல், சிவாகமங்களை அச்சிடுதல், சித்தியாருக்கு அறுவருரை அச்சிடுதல் சைவ சித்தாந்த சாத்திர சம்பந்த மான எல்லா நூல்களுக்கும் ஒரு அகராதி ஏற்படுத்துதல், சைவசித்தாந்த நூல்கள் யாவும் அடங்கிய புத்தகசாலை ஒன்று ஏற்படுத்துதல், சைவசித்தாந்தப் பேருரையாளர்களை வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்தல், ஆராய்ச்சிக்கழகம் நிறுவுதல், சித்தாந்த நிலையங்களை இந்நாட்டிலும் பிற நாடுகளிலும் ஏற்படுத்துதல், ஆங்கிலத்தில் சித்தாந்தப் பத்திரிகை ஒன்று வெளியிடுதல், முதலிய சீரிய வேலைகள் செய்ய அறிவிலும், செல்வத்திலும், அனுபவத்திலும் முதிர்ந்த பெரியோர்கள் முன்வருவார்கள் என்பதில் ஐய மில்லை. உதாரணமாக அண்மையில் இலங்கையில் நடக்கப் போகும் தத்துவ சாத்திர மாநாட்டுக்கு இரண்டொரு பிரதிநிதிகளை அனுப்பி சைவ சித்தாந்த சமயத்தை விளக்கி வைக்க ஏற்பாடு செய்தல் ஒரு நல்ல காரியமாகும். இத்தகைய

ஆக்க வேலைகள் மட்டுமல்லாமல் பொதுவாக மக்களை வெறும் ஜாதிச் சைவர்களாய் மட்டுமல்லாமல், உண்மைச் சைவர்களாக ஆக்குதல் வேண்டும். அன்பும், ஒழுக்கமும், தூய்மையும், வாய்மையும் இராத ஒருவரை சைவர் என்று கூறமுடியாது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல், குறை கூறல் முதலியன சைவத்துக்கு மாறுபாடான தீய குணங்கள் என்று வற்புறுத்திக் காட்ட வேண்டும். ஒவ்வொருவரும் தன்னை அளவு கோலிட்டுத் தான் உண்மைச் சைவனு என்று பார்த்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு சைவனும் தன் வாழ்க்கைக் குறிக்கோள் என்னவென்பதை தனக்குத் தானே நிர்மாணம் செய்து கொள்ள வேண்டும். புறவாழ்க்கையில் சைவக் கொள்கை கட்கு இணங்கி வாழ்கிறோமா என்று உன்னிப் பார்க்க வேண்டும். அனுதினமும் இறைவனை வழிபடுகிறோமா, திருநீறு அணிகிறோமா, உருத்திராட்சம் தரிக்கிறோமா, சிவ பூசை செய்கிறோமா, ஐந்தெழுத்தைச் சொல்லுகிறோமா, தேவார திருவாசகங்களில் ஒரு பாட்டையாவது படிக்கிறோமா, மெய்கண்ட சாத்திரங்களை நாடுகிறோமா, கோயில் வழிபாடு செய்கிறோமா, அடியார்களுக்கும் ஏழைகட்கும் அமுதுசெய்து செய்விக்கிறோமா, சைவப்பெரியார்களை வணங்குகிறோமா, அவர்கள் இணக்கத்தை நேசிக்கிறோமா, சிவஸ்தலங்களையும் நல்விழாக்களையும் கண்டு ஆறுதல் கொள்கிறோமா, சமயத்தொண்டை உழைப்பாலோ அல்லது பணத்தாலோ ஒருசிறிதாவது செய்கிறோமா, நம் குழந்தைகளுக்குச் சிவ ஒழுக்கங்களைக் கற்பிக்கிறோமா, நம் குடும்பத்தில் ஒருவரையாவது சுத்த சமய வாழ்வுக்குப் பக்குவப் படுத்துகிறோமா, சமய உண்மைகளை ஆராய்ந்து அதில் அறிவு இன்பம் அடைகிறோமா, இறைவனை யடையும் வழி தேடுகிறோமா என்றெல்லாம் அளவுகோலிட்டுப் பார்க்க அறிவுறுத்துதல் வேண்டும்.

நாமிருக்கும் காலம் மனித அபிவிருத்தியில் ஒரு நெருக்கடியான தருணமாகும். விஞ்ஞானமும் பகுத்தறிவும் தலையோங்கிய காலம். இவைகள் வேண்டியதே. ஆனால் கூர்ந்த விஞ்ஞானிகள் தான் உண்மையைக் காண வல்லவர்கள். ஜீன்ஸ், எட்டிங்கடன் முதலிய மேனாட்டுத் தத்துவ விஞ்ஞானிகள் உலகின் உண்மைத் தன்மையை அறிவது

விஞ்ஞானத்திற்கு அதீதப்பட்டது என்று முடிவு கட்டியுள்ளார்கள். எனினும் உலகு உண்மையா, மனதின் பாவனையா, உலகுக்கும் உயிருக்கும் உள்ள சம்பந்தம் என்ன என்ற விஷயங்களில் அவர்களுக்கு ஐயப்பாடு இன்னும் தீர்ந்தபாடில்லை. ஆல்டஸ் ஹக்ஸ்லி போன்ற சிந்தனையாளர்கள் நம் நாட்டுக் கருத்துக்களில் உண்மை காண்கிறார்கள். ஆனால் வேதாந்தத்தின் தெளிவாம் சித்தாந்தம் அவர்களுக்கு தெரிந்ததாகக் காணப்படவில்லை. ஆகவே சித்தாந்தத்தின் உண்மையை உலகறியச் செய்வது நம்மனோர் கடமையாகும். அறிவுக்கும், அனுபவத்துக்கும் முரண்படாத தத்துவம் சைவசித்தாந்தமாகும். இது பூரண தத்துவம் என்பதை உலகு அறியவேண்டும். அன்பையே அடிப்படையாகக் கொண்டுள்ளதாலும் பிற சமயங்களை இகழாததாலும் இது உலகப் பொதுச் சமயம் என்று திட்டமாகச் சொல்லலாம். பொறுமையும் நம்பிக்கையும் இல்லாத இக்காலத்தில் பௌராணிக சமயத்தில் மக்கள் உண்மை காண்பது அரிது. ஆகையால் காலத்துக்கேற்ப தத்துவத்தை முன்வைத்து பௌராணிக சமயத்தைப் பின்வைக்கவேண்டும். இந்தவகையில் திருப்தி யளிக்கக்கூடியது சைவசித்தாந்தம் ஒன்றேயாகும். ஆகவே, உலகம் சித்தாந்தத்தின் ஆறுதலை நோக்கி நிற்கிறது என்று கூறுவது மிகையாகாது. இம்மாநாட்டிற் கூடிய அறிவிற் சிறந்த பெரியோர்கள் சித்தாந்த சைவத்தை விளக்கத் தகுந்த வேலைகளில் ஈடுபட்டு வழிகாட்டுவார்கள் என்று நம்புகிறேன். கனம் சர். கந்தையா வைத்தியநாதர் அவர்களைத் தலைமைதாங்கி மாநாட்டை நடத்திவைக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். மாநாடு செவ்விய முறையில் நடைபெற ஆலவாய் அண்ணல் அருள் புரிவாராக.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவசித்தாந்த மகா சமாஜம்

## 49-வது ஆண்டு நிறைவு விழா

விருதுநகர்

# சைவ இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை

(திருவாளர் C. இராமலிங்கம், M.A.)

*[27—12—54]*

தாய்மார்களே! பெரியோர்களே! இளைஞர்களே!

உங்கள் அனைவிருக்கும் எனது பணிவான வணக்கம். இவ்வரிய வாய்ப்பினை நல்கி, என்னைப் பெருமைப்படுத்தும் சைவசித்தாந்த மகா சமாஜச் செயற்குழு உறுப்பினர்களுக்கு எனது பணிவும், நன்றியும் ஒன்றிய வணக்கம் பல. இவ்வாய்ப்பு அருமையுடையது. எனது அருகதையைப் பிறரை விட யான் நன்கு அறிவேன். ஆதலால் இவ்வாய்ப்பின் அருமைப்பாட்டினை நன்கு உணர்கிறேன். எனது வாழ்வில், இந்நாள் ஓர் குறித்தகுநாள்; எந்நாளும் பொன்னுளெனப் போற்றுவேன். ஒருவனது வாழ்வில் இத்தகைய நாட்கள் ஓரோவமயம் நிகழும். எந்தையனையர் அவையத்து முந்தியிருக்கச் செய்வதாலும், எனது அன்னை யான் சான்றோர் அவையிலுளன் என அறிந்து, பெற்றபொழுதினும் பெரிதுவக்க இந்நிகழ்ச்சி வாய்ப்பு தருவதாலும் தயக்கமின்றியே ஒப்புக்கொண்டேன்.

சென்ற ஆண்டு இவ்வாய்ப்பு எனக்கு அமைந்திருப்பின், இளைஞனாகவே நின்று இளைஞரிடையே பேசி இருப்பேன். இவ்வாண்டு என் வாழ்வில் உற்றமாற்றத்தால் முற்றிலும் இளைஞனாக இல்லாது, பேசுகின்றநிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் அகவையில் (age) இளைஞனே. இப்பேரவையில் யான் கலந்துகொள்வதற்குரிய அறிவு, அனுபவம், ஆய்வு ஆகிய எந்நிலையிலும் முதிர்ச்சி இல்லாத யான், பங்குகொள்ள அஞ்சுகிறேன். சைவசித்தாந்த சாத்திரங்களில் தேர்ச்சியில்லை. பயிற்சியும், கடந்த சில ஆண்டுகளா

கத்தான் உண்டு. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், B.A. பயில்கின்ற மாணவர்களுக்குச் "சித்தாந்தம்" பயிற்றும் பேறு இரு ஆண்டுகள் தொடர்ந்து பெற்றேன். ஆங்கில மொழியிலே பயிற்றுவிக்க வேண்டியிருந்ததால் அம் மொழி வாயிலாகவே, நான் முதன் முதலாகச் சித்தாந்த முடிவுகளை அறியலானேன். ஆனால் எனது கருத்துலகில் அல்லது எண்ண உலகில் ஒரு புதுத்துறை, அந்நாள் தொட்டு அமையலாயிற்று. பின்னர் முறையாக நுழைபுலம் மிக்க பேராசிரியரை அடுத்து, "திருவருட்பயன்" யானும் சிலரும் பயின்றோம். இப்பொழுது "சித்தியார்" பயின்று வருகிறோம். இந்நிலையில் யான் பேசுமாறெங்ஙனம் ?

கடந்த பத்தாண்டுகளாகவே சைவசித்தாந்தம், கங்கை நதிக்கரையிலும், முப்பெரும் ஆறுகள் கலக்கும் பதியிலும், சிறந்த பேராசிரியர்களால் ஆண்டுக்கொரு முறை விரித்துரைக்கப்பெற்று வருகின்றது. பேராசிரியர்கள்: இராமானுஜாச்சாரியார், கோ. சுப்பிரமணியப்பிள்ளை, காலஞ்சென்ற சாத்தூர் கந்தசாமி முதலியார், உயர்திருவாளர் மா. பாலசுப்ரமண்ய முதலியார், சைவப்பெரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை, உயர்திரு க. வச்சிரவேலு முதலியார், டாக்டர் மகாதேவன், யோகி சுத்தானந்தர் ஆகிய அறிஞர்கள், காசியிலும் அலகாபாத்திலும் சித்தாந்தத்தைப் பற்றிச் சொற்பெருக்காற்றியுள்ளனர். இவர்களது சொற்பொழிவுகளை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரது ஆண்டு வெளியீடுகளிலும், (University Journal) பதிப்புகளிலும் காணலாம். தனித்தும் பதிப்பித்துள்ளனர்.

இத்தகைய வளர்ச்சிக்கு அடிகோலியவர், திருப்பெருந்திரு அருள்நந்திதம்பிரான் சுவாமிகளாவர். பனசையின் சீரிய அறப்பணிகளும், சமயப்பணிகளும், மொழிப்பணிகளும் யாவரும் அறிந்தனவாகும். அவற்றை இவண் விரித்துரைத்தல் கொல்லன் களத்து ஊசி விற்றலையொக்கும்.

என்னனைய தோழர்களாகிய உங்களோடு கலந்து எண்ணுகின்ற விழைவுமிக்கவன் யான். அவ்வகையில் இவ்வாய்ப்பு பல இன்றியமையாதனவற்றை உங்களோடு எண்ணுவதற்கு உறுதுணையாகும் என நம்புகிறேன். கடந்த நான்காண்டுகளாகக் கல்லூரியில் ஆசிரியனாக யான் பணியாற்றி வருவதால் இளைஞர்களாகிய உங்களோடு

தொடர்புகொள்ளவும் உங்கள் உளநிலைகளை நன்கறியவும் எனக்கு முடிந்தது. யான் கல்லூரியில் பயின்ற ஆண்டுகள் ஐந்தாகும். இப்பொழுது ஆசிரியனாக ஏறத்தாழ ஐந்தாண்டுகள் பயின்றுளேன். இப்பத்தாண்டுகளில் யான் அறிய நேர்ந்த உண்மைகள் பலப்பலவாகும். அங்ஙனம் அறிந்த உண்மைகளைக் கூற முற்படுகிறேன். திறந்த உள்ளத்தோடு ஏற்றருள வேண்டுகிறேன்.

குறிக்கோள்

பொதுவாக, குறிக்கோள் இலாத வாழ்வு இந்நாள் மாணவரிடையே அமைந்துள்ளதை, யான் அறிந்து பன்முறை உளம் நைந்ததுண்டு. பள்ளி இறுதித்தேர்வு எழுதுகின்ற மாணவனை அவன் கல்வி நிலையில் கொண்டுள்ள கருத்து யாதெனக் கேட்பின், அவன் கல்லூரி பயில இருப்பதாகக் கூறுவானேயன்றி எப்பிரிவில் பயில இருக்கின்றான் எனவும் சொல்லான். தெரியவும் தெரியாது. பௌதிகப் பிரிவில் சிறப்பு வகுப்பில் தேர்ந்த பின்னர், சட்டம் பயில்வாரைக் காண்கின்றேன். B.Sc. தேறிய மாணவர்கள் சட்டம் பயில்கின்றார்கள். ஏதோ பட்டம் பெறுகின்ற ஒரு விழைவு உள்ளதேயன்றி, தனது திறன் தெரிந்து அத்திறனை வளர்க்கின்ற வகையில் பிரிவினைத் தேர்ந்து முழுமையடைகின்ற முயற்சியில்லை. இந்நிலை மிகமிக வருந்தத் தக்கது. பட்டம் பெற்றவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் இன்று வலுத்துக் காண்கின்றது. அதற்குக் காரணங்கள் பல. அவற்றுள் குறிக்கோள் இலாது பயிலலும் சிறந்த காரணமாகும். பிற காரணங்களை ஈண்டு விரித்தல் பொருந்தாது; முறையுமாகாது. ஒருவன் அல்லது ஒருத்தியின் வாழ்வில் கல்வி ஐந்தாமாண்டில் தொடங்கி இருபத்தொன்று அல்லது இருபத்திரண்டாமாண்டு வரை நிகழ்கின்றது. தொழிற் கல்வியாயின் (பொறியியல், மருத்துவம்) இன்னும் இரண்டாண்டுகள் மிகுதியாக ஆகும். ஆக, ஒருவனது வாழ்நாளில் சிறந்த ஆண்டுகள், இளமை கொழிக்கும்—ஆதலால் அறிவு நலமிகும் – ஆண்டுகள், கல்வி நிலையங்களில் கழிகின்றன. இந்நிலையினை நினைவில் இருத்தி, குறிக்கோள் இலாது பயிலும் மாணவ மாணவிகளை நோக்கின் அவர்தம் வருங்காலம் மிகவும் இருண்டு விளங்குமேயென்ற அச்சம் நல்லறிஞர்களை வாட்டுகின்றது.

இக்குறிக்கோள் இலாதநிலை கல்வி பயில்வாரிடத்து மட்டும் இல்லை. பிற இளைஞரிடத்தும் காணலாம்.

மேலே கண்ட நிலையினையொட்டிப் பார்க்கின் மற்றொரு நிலை புலனாகும். மாணவ, மாணவிகள் பயிலுகின்ற கல்வித் திட்டம் ஒரு சிலவகைகளில் குறையுடையது என்றே எண்ண வேண்டும். மாணவ உலகில் காணுகின்ற குறைகளை ஆய்ந்து, காரணங்கள் தெரிந்து அவற்றைக் களைய முற்படவேண்டும். அத்தகைய ஒரு பெருமுயற்சி இன்னும் ஏற்படவில்லை. கல்வித்துறையிலுள்ள மாணவர்கள் அறிவுத்துறையில் "தரக்குறைவு", மாணவர்களிடை "அமைதிக் குறைவு" அல்லது ஒழுங்கின்மை, "சமயப்பற்றுக்குறைவு" ஆகியவெல்லாம் மேடைதொறும் பேசப்பெறுவதை அறிகின்றோம். இதனைப்பற்றிச் செவ்வியமுறையில் ஆராய்வதை ஆய்வு மூதறிஞர்களடங்கிய ஒரு குழு மேற்கொள்ள வேண்டும்.

பொதுவாக இன்றைய கல்வித் திட்டம் ஒரு மாணவனது அறிவைக் கூர்மைப் படுத்துகின்றதேயன்றி உணர்வினைப் பண்படுத்துகின்றதில்லை. ஏதோ ஒருசிலர் இங்கும் அங்கும் பண்புநலம் சிறந்தவர்களாகவும், மதிநலம் உடையவர்களாகவும் உளர். உலக அரசியல்நிலை, பொருளியல்நிலை, வல்லரசுகளின் போக்கு இவற்றையெல்லாம் எண்ணுகிற பொழுது, "அரம் போன்ற கூர்மையின்" விளைவாக அவை விளங்கக் காண்கிறோம். இவற்றிடையே பண்புநலம் தோயுமேல், சிறந்த நலங்களை உலகம் எய்தும். இதைத்தான் காலஞ்சென்ற சரித்திரப் பேராசிரியர் H. G. Wells என்பவர், "பலநாடுகள் கூடும் பேரவையில் நாட்டுத் தலைவர்களது தலைகள் இணைகின்றனவேயன்றி உள்ளங்கள் குவியவில்லை" என்றார். (They put their heads together and not their hearts.) இப்பேருண்மை இந்நாள் உலகியலுக்கு ஒவ்வுவது போல இல்லறவியலுக்கும் ஒவ்வும். தனி ஒருவன் வாழ்விற்கும் பொருந்தும். சுருங்கக் கூறின் அயலவன் வாழவேண்டுமென்ற எண்ணம் அருகி வருகின்றது. விரிந்த தந்நலம் பொதுநலமெனப் பெயர் பெறுகின்றது. உள்ளத்தால் வாழ்பவர், அல்லது உணர்வு மிக்கவர், அல்லது பண்புநலம் சான்றவர் மிகச் சிலராகி, இந்நலங்கள் இலாதார் பலராதலால் பல கேடுகளை நாம் இன்று காணுகிறோம்.

ஆனால் உலகம் இன்று கேடுறாது இயங்குகின்றதேயென்றால், செந்நாப்போதாரின் திருவாக்காகிய "பண்புடையார்ப் பட்டுண்டுலகம் அதுவின்றேன் மண்புக்கு மாய்வது மன்" என்பதை நினைவூட்டலாம். பண்பு உடையவரிடத்தில் பொருந்தி இருப்பதால் உலகம் உள்ளதாய் இயங்குகிறது. அது இல்லையானால் மண்ணில் புகுந்து அழிந்து போகும் என்பதன்றோ "பொய்யில் புலவன் பொருளுரை." பிறர் துன்பம் கண்டு பொறாத நிலையும், பிறர் குற்றம் காணாப் பெருந்தகைமையும், பிறர் நலம் பேணும் நல்லொழுக்கமும் உடையவர்களாக இளைஞர்கள் வாழவேண்டுமென்பது தமிழ்மறையாகிய திருக்குறளின் நற்செய்தியாகும்.

சமயம் என்ற சொல்லைச் சற்று ஆராய்வோம். சமயம் என்பது ஒரு பெரும் பிரிவு. அதனை ஆன்றோர் தத்துவம், ஆசாரம், சடங்கு என்னும் முப்பகுப்பு உடையதாகக் கொண்டனர். தத்துவம் அல்லது மெய்ப்பொருளியல், கடவுள் உயிர் உலகம் என்னும் முப்பொருள்களின் இயல்புகளையும், அவை ஒன்றற்கொன்று இணங்குமாறும் பிணங்குமாறும் தெளிய எடுத்துரைக்கும். ஆசாரம் என்பது சமயத்தார் தத்தமக்கு நன்றெனக்கொண்ட ஒழுக்கங்களினின்றும் வழுவாது நின்று ஒழுகுதல். சடங்கென்பது சமயத்தை முன்னிட்டுக்கொண்டு, ஓர் உயிர் கருத்தரிப்பது முதல் அஃது இறந்த பின்னரும் செய்யப்பட்டுவரும் பல வகைச் செயல்கள்.

மெய்ப்பொருளியற் கருத்துக்கள் காலந்தோறும் பெரிதும் மாற்றம் உறாதவை. ஆனால் மக்கள் தம் அறிவுநிலை, பண்பாடு, நாகரிகப் போக்கு முதலானவற்றைப் பொறுத்த வகையில் ஆசாரமும், சடங்கும் விரிந்தும் குறைந்தும் மாறியும் வரும். ஒருநாட்டின் மெய்ப்பொருளியலைக் கொண்டே (Philosophy) மக்களின் ஒழுகலாறு இன்னதென்று உணர இயலாது. சமயத்துள் தத்துவத்தைப் போற்றி ஆசாரத்தையும் சடங்கையும் கைவிட்டவர்கள் உளர். தத்தமக்குரிய ஆசாரத்தினின்று வழுவாது ஒழுகுதலே சாலும் என்று கொண்டு ஏனைய இரண்டையும் ஒழித்து வாழ்பவர்களும் இருக்கின்றார்கள். ஆனால், பெரும்பான்மையோர் சடங்குகளையே பின்பற்றுபவர்களாவார்கள். நமது சமயமேயன்றிப் பொதுவாகச் சமயநிலையில் ஒழுகு

பவர்களை நோக்கினால் முதலில் கண்ட முப்பகுப்பினையும், முழுமையும், முழு உணர்வோடு பின்பற்றுபவர்கள் ஒரு சிலரே. மிகப்பலர் ஒன்றைவிட்டு மற்றொன்றைக் கடைப் பிடிப்பவர்களே.

இன்று பொதுவாகச் சடங்குகளில் நம்பிக்கை அருகி வருகின்றது. சடங்குகளின் உட்பொருள் உணர்ந்தவர்கள் ஒருசிலர். முறை பிறழாது ஒழுகுகின்றவர்கள் சடங்கு களுக்கெல்லாம் விளக்கம் தருதல் வேண்டும். பின்பற்று பவர்களில் பலர் சடங்குகளின் உட்கிடை யாதெனத் தெரி யாதே பின்பற்றுகின்றவர்கள். இந்த உண்மைகள் நமது சைவசமயத்திற்கும் பொருந்தும். வாழ்வினை அகம் புறம் எனப் பகுத்துக்கொள்ளலாம். ‘சமயம்’ நம்மைச் சமைப்பது, பக்குவப்படுத்துவது, பண்படுத்துவது என்று கொள்ளின், நமது அகப்புற வாழ்வை அது ஊடுருவி நிற்பதை அறியலாம். ஆனால் இன்று சமயத்தைப் பின்பற்றுபவர்களிடை முரணான வாழ்க்கையைக் காண்கி றோம். முரணை அவர்கள் உணர்வதில்லை. சமயவாழ்க்கையை நடத்துபவர்கள் தமது வாணிபத் துறையிலோ, அலுவல் துறையிலோ முரணான வாழ்க்கையை வாழக் காண்கிறோம். வாழக் காணுகிறபொழுது சமயம் போலி வாழ்க்கைக்கு அரண் செய்வது என்று எச்சமயத்தையும் சார்ந்து நிற்காத வர்கள் முடிவு கொள்கிறார்கள். சுருங்கக் கூறின் அகப்புற வாழ்விடை முரண் இருத்தலாகாது. (Dichotomy between one’s convictions and outward life). மேலும் சமயத் தைப்பற்றி வேறு சில பொது உண்மைகளையும் உணர வேண்டும். உணரும் வழி ஆங்காங்கு நமது சைவசமயத்தின் சிறப்பினையும் உணரலாம்.

கடந்த ஐம்பதாண்டுகளில் சமயம்பற்றிய அறிவு, பால் பற்றிய (sex) அறிவு ஆகியவற்றைப் பற்றிப் பேச்சும் எழுத் தும் மாறி மாறி மக்கள் கருத்தைக் கவர்ந்துள்ளன. வில்லியம் ஜேம்ஸ் (William James) என்பவர் விக்டோரியா காலத் தில் எழுதும்பொழுது இரண்டு பக்கங்களில் “பால் பற்றிய அறிவை” “அன்பின் இயல்பூக்கம்” (Instinct of love) என்று விரித்து விடுத்தார். பெருக்கிப் பேசினாரல்லர். ஆனால் சமயத்தைப்பற்றி அவரது சீரிய சொற்பொழிவில் பல்வகைச் சமய அனுபவங்களை விரிவாக எழுதியுள்ளார்.

அவருக்குப்பின்னால் மேலை நாடுகளில் சமயத்தைப்பற்றி அத்தகையதொரு பேருரை இன்னும் ஆற்றப்பெறவில்லை. இன்னும் உளநூலில் "பால்பற்றிய அறிவு" சிறப்பிடம் பெறுகின்றது. அம் மனஆய்வு வல்லவரான ஃப்ராய்டு, (Freud), உயிர்நூல், உடல்நூல் வல்லவரான கென்ஸி (Kensey) போன்றவர்கள் "பால் உணர்வுபற்றிய செய்திகளைக்" கூசாது பேசுகின்றார்கள். ஆனால் சமயத்தைப் பற்றிப் பேச அஞ்சுகின்றனர்.

சமயத்தின் புறக்கூறுகளாகிய சடங்குகளும், அவை போல்வனவும் கைவிடப்பெறுகின்றன. அவை மாட்டுள்ள நம்பிக்கை அருகுகிறது. இது கண்கூடு. ஆனால் இதுகொண்டு சமய உணர்வு குன்றுகிறது எனக் கொள்வது தவறென எண்ணுகிறேன். தனி ஒருவனின் அகவாழ்வை-சமயத்தின் நிலையை – நோக்கின் அது பல்வகையில் வேரூன்றி நிற்றலை யறியலாம். மக்கள் வாழ்க்கையில் பல கூறுகளிலும் விரவி நிற்பது சமயம். புறநிலைகளில் மாற்றம் காணலாம். சமயம் ஒரு நிலையத்தின் வாயிலாக வளரும்பொழுது குறைகள் நேரும் (Institutional Religion). அவற்றைக்கொண்டு 'சமயம்' குறை மிக உடையது என எண்ணுதல் பொருத்த மன்று.

மனிதன் தன் அகவாழ்வினை அகக் காட்சியின் (Introspection) வாயிலாக அறியத் தலைப்படும்பொழுது அவனது அகவாழ்வு, பல எண்ண—உணர்வு—செயல் கோவைகளால் (Sentiments) ஆனது என்பதை அறியலாம். இவ்வெண்ண—உணர்வு—செயல் கோவைகள் பல திறத்தன. இவற்றிடையே ஒன்று தலைமை அல்லது ஏற்றம்பெற்று அகவாழ்வினை ஆட்சிபுரியும் (Dominant Sentiment). சமயமும் இவ்வகையில், ஆய்கின்றபொழுது ஒரு எண்ண—உணர்வு—செயல் கோவையாகும் (Religion is a Sentiment).

சமயத்தைப்பற்றிப் பலவகைகளில் எண்ணுகிறோம். எண்ணும்பொழுது பல உண்மைகளைத் தெரிகிறோம். ஆழ்ந்து எண்ணப்படும் எண்ணங்கள் உணர்வு நிலைக்கு அடிகோலுகின்றன. சமயவாழ்வு சான்ற பெரியவர்களைக் காணும்பொழுது உணர்ச்சி பெறுகிறோம். சமய நிலையங்களைத் தொழுகிறோம். சமயம் நமது அகப்புற வாழ்வில்

ஏற்றம்பெற்று ஆட்சியுறுவதால், அதனை ஒரு எண்ண— உணர்வு—செயல் கோவை எனக் கருதுகிறேன். Sentiment என்ற சொல் உள நூலில் என்ன விரிந்தபொருளைப் பயக்குமோ, அப்பொருளினைச் "சமயம்" உணர்த்துவதால் நான் சமயத்தை ஒரு Sentiment அல்லது எண்ண—உணர்வு—செயல் கோவை எனக் கொள்கிறேன்.

சமயவாழ்விற்கு அடிநிலையான இன்றியமையாத உணர்வுநிலை அல்லது அனுபவநிலை யாதெனஅறியப் பல பிற ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. அவற்றுள் ஒருசிலவற்றைக் காண்போம்:

ஸ்கிலர் மாக்கர் (Schleier Macher) என்பவர் சமயத்தின் "இன்றியமையாத கூறு" "தவிர்க்கொணாத சார்ந்து நிற்கும் உணர்வு" என்றார் (A feeling of absolute dependance). எச்சமயத்தை ஆய்ந்தாலும் அதனின் ஒரு கூறு இறைஞ்சுதல், சார்ந்து நிற்றல், அடைக்கலம் என்ற மூவகையுள் அடங்கும். திருவாசகத்தை அருளிய மணிவாசகப் பெரியார் அடைக்கலப் பத்து, திருச்சதகம், பிரார்த்தனைப் பத்து, உயிருண்ணிப் பத்து போன்றவற்றுள் தமது திரண்ட கருத்தாக வெளியிடுவது இதுவேயாகும். வைணவத்தின் பிழிவு, நெறி, அடைக்கலம் ஆகும். இதனை அவர்கள் "பிரபத்தி" என்பார்கள் (Complete self surrender). மணிவாசகப் பெருந்தகையின் பாடலாகிய, "அன்றே என்றன் ஆவியும்" என வருவது நமக்கு அடைக்கல நிலையை நன்கு வலியுறுத்துகிறது.

> அன்றே யென்றன் ஆவியும்
> உடலும் உடைமை யெல்லாமும்
> குன்றே யனையாய் என்னையாட்
> கொண்ட போதே கொண்டிலையோ
> இன்றோ ரிடையூ றெனக்குண்டோ
> எண்டோள் முக்கண் எம்மானே
> நன்றே செய்வாய் பிழை செய்வாய்
> நானோ இதற்கு நாயகமே.

மற்றொரு சைவ சமய குரவராகிய தம்பிரான் தோழர், சுந்தரர் பெருமான் வாழ்விலும் இறைவனைச் சார்ந்து எது வேண்டினும் அவனிடத்து இறைஞ்சிப் பெற்ற நிலையைக்

காணலாம். அருட்பெரியார்களது வாழ்க்கையில் இந்நிலை விளக்கமுறுகின்றது. மேலே கண்ட, சார்ந்து நிற்கின்ற உணர்விலே திருக்குறளின் உயிர்நாடியாக விளங்கும் ஒரு குறளிற் காணும் சொல்லாகிய "சார்பு" யாது?

*சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்*
*சார்தரா சார்தரு நோய்*

இக்கேள்வி Rudolf Otto என்பவரால் கேட்கப் பெறுகிறது. சமய வாழ்விலே அறிவுக்கூறு, உணர்வுக்கூறு, செயற்கூறு (Cognitive, emotive and conative) என முக்கூறுகள் உண்டு. அவற்றுள் அறிவுக்கூறு சார்பினை இடையறாது உணர்த்தி நம்மை ஆழ்ந்த அனுபவத்தில் உய்க்கும். இதனை இன்னும் விரிவாகக் கூறின், ஒவ்வொருவனும் தனது சமய வாழ்விலே பல முறைகளில் தான் எவ்வகைச் சுதந்திரமும் உடையவன் அல்லன் என்பதை உணர்வான். இதனை அப்பெரியார் "Over whelming feeling of nothingness" என்று கூறுவார்.

ஏதோ ஒரு பேராற்றல் இயற்கை—இறந்த நிலையினின்று இயக்குவதையும் அவ்வாற்றல் வழி,உலகம் இயங்குவதையும் அவ்வுலகின் கூறுகளான பலவகை உயிரினங்களின் வாழ்வு, அமைவதையும், நாளும் சமய வாழ்வில் தோய்ந்து நிற்போர் உணர்கின்றார்கள். இவ்வுணர்வினை அப்பேரறிஞர் Holy! Holy!! என்று குறிக்கின்றார். சமயத்தின் உள்வீடு இதுவேயாகும். இது, தூய்மை மிக்கது, மிக்குத் தொடர்புடையது, வாழ்விற்கு இன்றியமையாதது என்ற பல பொருள்களைப் பயக்கும் ஒரு சீரிய ஆங்கிலச் சொல்.

மேலே கண்ட சமய அடிப்படை நிலைகளை அல்லது சிறந்த கூறுகளை ஒத்த பிறிதொரு இன்றியமையாத கூறு அல்லது பொது இயல்புண்டு. அதனை Wobbermin என்பவர் விளக்குகின்றார். இறை அருளினை இறைஞ்சி நிற்கும் பெருவிழைவும், ஏதோ பேராற்றல் நம்மைக் காத்து வாழ்விக்கின்றது என்ற உணர்வும், சமயத்தின் அடிநிலையில் நின்று நம்மை வாழ்விப்பதை அவர் Intense longing and Security என்னும் சொற்களால் உணர்த்துகின்றார். பல சமயங்களின் பாடல் தொகுதிகளை, தோத்திரத்

திரட்டுகளை ஊன்றி அறியின் (Devotional literature of the religions of the world) மேற்குறித்த பெருவிழைவும் அல்லது ஆராக்காதலும் காப்பாற்றப்பெறுகின்ற உணர்வும் சமயங்களின் உயிர்நிலை என்பது புலனாகும்.

நமதுநாட்டுச் சமயங்கள் மனித உளநிலையை ஒட்டியே அமைந்துள்ளதை அறியலாம். அறிவு நிலையை (Intellectual aspect) சிறப்பாகக் கொண்டுள்ள சமயங்கள் உண்டு. உணர்வுநிலையை மிகுதியாகப் பயன்படுத்தும் பக்தி நெறிகள் உண்டு (Bhakti cults). பக்திப்பெருக்கு செயல்களாகப் பரிணமித்துச் சமயவாழ்வை ஊடுருவி நிற்பதும் உண்டு. இவ்வமைப்பு சிறந்ததொரு அமைப்பாகும்.

திருவாசகம் ஒரு பக்திப்பனுவல் ஆகும். ஆனால் மாணிக்கவாசகப் பெரியாரை " அறிவாற் சிவமே " ஆனவரென்று ஆன்றோர் போற்றினர். உலகு, உயிர், சிவம் ஆகிய யாவும் சிவமாகவே அவருக்குப் புலப்பட்டன. திருவாசக வாக்கிலே கூறவேண்டுமானால்,"சிந்தைதனைத்தெளிவித்துச் சிவமாக்கி" என்ற வரிகள் ஆன்றோர் கருத்திற்கு அரண் செய்யும். திருவாசகம் சிவத்திற் சிவத்தைக் காட்டும் ஒரு பெருங்குருபீடம் என்று ஆன்றோர் குறிக்கின்றனர். நம் செயலற்றிந்த நாமற்றபின் இறைவன் அடியை நாடவேண்டும் என்பதைப் பல்லாற்றானும் அவர்தம் பாக்கள் நமக்கு உணர்த்துகின்றன.

ஜெர்மானியப் பல்கலைக் கழகத்தில் சமயங்கள் " ஒப்பமை" (Comparative religion) என்றபெரும் பிரிவினைச் செவ்விய நிலையில் தமது புலமையெலாம் தோன்ற ஆசிரியத் தொழில் வகித்துவந்த ஒரு பெரியார் ஃப்ரடிரிக் ஹைலர் (Friedrich Heiler) என்பவராவார். இவர்தம் உள்ளத்தைக் கவர்ந்தவர் நமது மணிவாசகராவர். திருவாசகத்தின் உட்கிடையை ஒருங்கே உணர்த்தவல்ல பகுதிகளை அவர் கண்ணுற்று நமக்கு எடுத்துரைத்திருப்பது மிகவும் இன்பம் பயக்கின்றது.

சிவபுராணத்தில் " அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்ற வரி அவர் உள்ளத்தை முதலில் கொள்ளை கொண்டது. அடுத்து அவர் உள்ளத்தைக் கவர்ந்தது குழைத்த பத்தில் வரும் " கூறும் நாவே முதலாக " என்ற பாடலாகும்.

இறையருளில் இடையறுது உறைந்துநிற்கும் அருட்பெரியார்களில் இருதிறத்தவர் உண்டு. ஒரு சாரார் தம் மாட்டுக் காணும் வழிபாடு முதலியன தாம் இறைவனிடத்துக் கொண்டுள்ள பேரன்பால் விளைந்தவை என எண்ணுவர். மற்றொருசாரார் தாம் வழிபடுவதெல்லாம், இறையருள் தம்மிடத்துத் தொழிற்படத் தொடங்கியமையால் தான் என்ற கருத்துடையவர்கள்.

மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ள மற்றொரு பாடல் மணிவாசகர் தம்மை முழுமையும் ஒப்படைத்த நிலையில் தமது அந்தக்கரணங்கள், நா முதலியன எவ்வாறு இறை வழி நின்று இயங்குகின்றன என்பதை விளக்குகின்றது. சைவசமய ஆசிரியராகிய சம்பந்தர் பெருமானும் ஓரிடத்தில் அவர்தம் உரையெல்லாம் இறைவனது உரையே எனக் குறிக்கின்றார். ஏனைய அருட்பெரியார்களது வாழ்க்கையிலும் இந்நிலை பேசப்பெறுதலை அறியலாம். இதுகாறும் பொதுவாகச் சமயத்தைப்பற்றிப் பல உண்மைகளைத் தெரிந்தோம். அவ்வப்பொழுது அவ்வுண்மைகளை உளத்து இருத்தி, சைவசமயத்தினை நோக்குகின்றபொழுது புலனாகும் கருத்துக்களையும் குறித்தேன்.

அருண்மொழித்தேவராகிய சேக்கிழார் பெருமான் தமது பெரிய புராணத்தில்-திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில் - குறிக்கும் மற்றொரு கருத்தினை விளக்க விரும்புகின்றேன். அது "பேழ்கணித்தல்" என்பது. அதனை விரிவாகக் காணுதல் வேண்டும்.

அப்பர் பெருமானும், சம்பந்தரும் திருமறைக்காட்டில் திருக்கதவு ஒருவர் திறக்கவும் மற்றொருவர் அடைக்கவும் பாடுகின்ற பாடல்களைப் பற்றிய கருத்தை ஒட்டியதாகும். அவர்கள் ஆண்டவனருளில் ஒருமைப்பட்டிருத்தலையும், அவர்தம் மொழி, மறையாகும் என்பதையும் சேக்கிழார் பெருமான் உணர்த்துகின்றார்.

அப்பர்பெருமான் பல பாக்கள் பாடிய நிலையில் திருக்கதவு திறந்தது. ஆனால் ஒரு பாட்டிலேயே, சம்பந்தர்பாடிய நிலையில் திருக்கதவு திருக்காப்புச்செய்தது. இந்நிலையில் வாகீசர் தமக்கு அருமையில் திறக்கவும், சம்பந்தருக்கு எளிமையில் மூடவும் அமைந்ததை எண்ணுகின்றார். தாம் திருவருட்குறிப்பிற்கு மாறாக நடந்துகொண்டதாக எண்

ணிக் கவலுகின்றார். இந்நிலையில் சேக்கிழார் பேழ்கணித்து என்ற சொல்லை அப்பாடலில் அமைத்துப் பாடுகின்றார். பேழ்கணித்தலாவது யாது ?

"பேழ்கணித்தல்" என்ற சொல்லிற்கு ஆறுமுகத் தம்பிரானார் "தம்பிழை குறித்துச் சிந்தித்தல்" என்று பொருள் கூறுகிறார். பழைய குறிப்புரை ஒன்று "நித்திரையின்றிக் கண்மூடல்" என்று குறிப்பைக் குறிக்கின்றது. "உணர்விற்றுயில்" அல்லது அறிதுயில் எனவும் கொள்ளலாம். காலஞ்சென்ற தமிழ்ப்பெரியார் திரு.வி.கல்யாணசுந்தரனார் தமது பதிப்பில் பின்வருமாறு குறிக்கின்றார் : "கதவைத் திறக்குமாறு பிள்ளையார் தம்மைக் கேட்டபோது தாம் இணங்காது அவரைத் திறக்குமாறு கேட்டிருத்தல் வேண்டும் என்பது ஆண்டவன் திருவருட் குறிப்பாய் இருந்தமையால், தமக்குக் கதவு அரிதில் திறந்தது போலும் என்றெண்ணி அதனால் தாம் திருவருட் குறிப்பிற்கு மாறாக நடந்துகொண்டதாக உணர்ந்து அப்பர் கவன்றார் என்க. இஃது அப்பர் மனோநிலை—இந்நிலை அவர்தம் பெருந்தகைமையைப் புலப்படுத்துவது."

பெரியபுராணத்துக்குப் பேருரை கண்ட கோவன் புத்தூர்ச் சிவநெறிச்செல்வர், சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள் தமது உரையில் பேழ்கணித்து என்ற சொல்லிற்கு வேறு பொருள் ஏதும் காணவில்லை.

மணிவாசகப் பெருந்தகை யாத்திரைப் பத்தில்,

"பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற்கரியன் பெருமானே"

என்று பாடுகின்றார்.

இப்பாடலில் பேழ்கணித்தல் என்ற சொல் தம் பிழை நினைத்து உருகுதல் (Repentance) என்ற பொருளில் வந்தது. சமண சமயத்தில், நாளும் துயில் கொள்ளுமுன் அந்நாளைய நிகழ்ச்சிகளை நினைந்து தவறுகளை எண்ணி, நைந்து துயில் கொள்ளல் ஒரு பழக்கமாம். அப்பர்பெருமான் தம் பழக்கத்தினைத் "தருமசேனராக" இருந்த பொழுது மேற்கொண்டிருந்திருக்கலாம். நித்திரையின்றிக் கண்மூடி இருக்கின்ற நிலை, கவலை நமக்கு மிகும்பொழுதெல்லாம் நேர்கின்றது. ஆகையால் சேக்கிழார் திருவாக்

கினையும், ஆறுமுகத் தம்பிரானுர் உரை, பழைய குறிப்புரை, திரு.வி.க. அரும்பத குறிப்புரை, C.K.S. பேருரை எல்லா உரைவளங்களையும் உளத்து இருத்திப்பார்க்கின்றபொழுது நாளும் நமது சமய வாழ்வில் இத்தகைய முறையினைப் பின் பற்றுதல் பொருத்தம் என எண்ணுகிறேன். எனது இளைய நண்பர்கட்கு இதை எனது வேண்டுகோளாக விடுகின்றேன். அப்பர் பெருமான் நினைவாக இப்பழகத்தினை – உள்ளக்கசிவை—The gift of tears-concept of Grace—மேற்கொள்வார்களாக.

மேலைநாட்டு அருட் செல்வராகிய தெரிஸா, லயோலா (Teresa and Loyola) ஆகிய இருவரும் "நெக்கு நெக்குருகுதலை", "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குதலை", அகங்குழைதலை, ஆண்டவன் நம்மாட்டுக் காட்டும் அருட்பெருக்கினை உணர்த்தும் அறிகுறி என்கிறார்கள். இக்குறிப்பினை மிக நுண்ணிய முறையில் வில்லியம் ஜேம்ஸ் (William James) என்பார் தமது சிறந்த நூலாகிய பலதிற சமய அநுபவ நிலைகள் (William James; The Varieties of Religious Experience) என்ற நூலில் குறித்துள்ளார். அவர் கூறுவது, "Saint Teresa and Loyola have possessed what the church traditionally reveres as a special Grace, the so called gift of tears". இதனைத் திருவாசகத்தில் பரக்கக் காணலாம். திருவாசகத்தின் நற்செய்தியை—Message—ஒருவரியில் சொல்லவேண்டுமானால் "அழுதால் உன்னைப்பெறலாமே" என்பதாகும். திருவருள் முறையீடு—yearning for grace—என்பதுமிது.

நமது பக்திப் பனுவல்களெல்லாம் திருவருண் முறையீடேயாம். அருள்நலங்கனிந்து ஒழுகும் இப்பாடல்களைப் பாடியவர்களுள் மாணிக்கவாசகப்பெருந்தகையும், தாயுமான அடிகளால் தலைசிறந்த துறவி எனப் போற்றப்பெற்ற பட்டினத்து அடிகளும் தமது பாக்களுள் தம்மை இழிவு படுத்திப் பாடியுள்ளனர். இவ்வகையில் அவர்கள் பாடுதற்குக் காரணம் என்ன? இரு விளக்கங்கள் எனக்குத் தோன்றுகின்றன.

அருள் உணர்வு மிகுந்த நிலையில் உள்ளவர்கள் ஏனையோரை நோக்கினும் தமது குற்றங்களை உணர்வதிலும் அவற்றை நினைந்து நைதலிலும் சிறந்து விளங்குபவர்கள்.

அவர்களது உள்ளம் மிக நுண்ணிய நிலையை அடைகின்றது. அவர்களுக்கு அருளுணர்வு முதிர்ச்சியால் முற்பிறவிகளைப் பற்றிய அறிவும் ஒருகால் ஏற்படலாம். அவ்வகையில் தமது பழம்பிறப்புணரும் நிலையில் தமது குற்றங்களை உணர்வதாகக் கொள்ளலாம்.

மன்பதையின் சார்பிலே, அவர்கள் புரியும் குற்றங்களுக்கு எல்லாம் தாம் வருந்தி இறைவனது அருளை இறைஞ்சி நிற்கின்றதாகவுங் கொள்ளலாம். ஒன்று ஒருதலை: இவ்வருட் பெரியார்களது வாழ்க்கையில், மனித உருக்கொண்டு வாழ்கின்ற வாழ்வில், தம்மீது அவர்கள் சுமத்திக் கொள்ளும் குற்றங்களைப் புரிந்தவர்களாக நாம் கொள்வதற்கில்லை. நம்பொருட்டு 'வழக்கறிஞர்' நிலையினின்று வேண்டுவதாகக் கொள்ளவேண்டும். இல்லையேல் அவர்தம் பணிமை உணர்வாகக் கொள்ளவேண்டும். எந்நிலையில் நின்று நோக்கினும், நம்மளவில் இறையருளை இடையறாது வேண்டி நிற்கின்ற நிலையில் உள்ளோம். அவர்களது நிலையை நோக்க நமது நிலையின் இழிவு புலனாகும். அருள் வீழ்ச்சியின் இன்றியமையாமையையும் அறிதற்கு ஏதுவாகும்.

## தமிழர்தம் கடவுட் கொள்கை

"கடவுள்" என்ற சொல்லே பொருட்செறிவு மிக்கது. நான் சங்ககால நூல்களில் பிற புதைபொருட்களிலும் தமிழரது சமயத்தின் விளக்கத்தை—கடவுட் கொள்கையினை—வெகு தெளிவாகக் காண்கின்றேன். அவற்றை ஈண்டு விரிப்பதற்கில்லை. ஆதலால் சிறப்பு நிலைகளை விரிக்காது பொது உண்மைகளை விளக்க எண்ணுகிறேன். முழுமுதற் கடவுள் அல்லது பரம்பொருள் ஒன்று என்பது தமிழர்தம் அடிப்படையான கொள்கை. பலதெய்வங்களின் வழிபாடு, தமிழர்தம் கருத்திற்கு ஒவ்வாதது. யாவற்றையும் கடந்த நிலையில், சொல்லிறந்த நிலையில், வாக்கு உணர்வு இறந்த நிலையில் உள்ள இறைவனை எங்ஙனம் அறிதல் இயலும்? அறிவின் துணைகொண்டு அறிதல் இயலாது. 'உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படான்.' அவன் அருந்துணை கொண்டு அவன் தன் உருக்காட்ட நாம் முறை உணர வேண்டுமேயல்லாது, நம்மாட்டு முகிழ்க்கும் முயற்சிகளால்

அறியவோ உணரவோ முடியாது. இறைக்கு இருநிலை உண்டு. ஒன்று கடந்தநிலை; மற்றொன்று கலந்தநிலை (Transcendental and immanental). இறைவனைக்கடந்த நிலையில் கருதுவது இயலாது. உயிர்கள்தோறும் இறைவன் கலந்துள்ள நிலையில் காண்பதே எளிதில் அமையாது. ஆனால் மக்கட்குச் சேவைபுரிந்து இறையருளைப் பெறுதல் எளிதாம். இக்கருத்து திருமூலரால் தெள்ளிதின் விளக்கப் பெறுகின்றது. சித்தியார் பாடலும் அரண்செய்கிறது. விரிவு அஞ்சி விடுக்கின்றேன். நமது சைவசமயத்தில் வழிபாடு மூவகையில் அமையக் காண்கின்றோம். இவ்வகைகள் மக்கள் தம் அறிவு அநுபவநிலைகளுக்கேற்ப அமைந்துள்ள பெற்றி நமது உள்ளத்தைக் கவர்கின்றது. ஏனைய சமயங்களினின்றும் இதனைப் பிரித்து உணர்த்துகின்றது. உருவ, அருவுருவ, அருவ வழிபாடுகள் என வழிபாடு மூவகையாகும். எங்கள் பதியில் நித்தம் நட்டம் பயின்று பல்லுயிரையும் இயக்கி உலகத்தை உய்விக்கும் 'ஆடவல்லான்' உருவத் திருமேனி. 'சந்திரமௌளீஸ்வரர்' அல்லது 'ஸ்படிக லிங்கம்' அருவுருவத் திருமேனி. சிதம்பர ரகசியம், அருவநிலை. மக்கள் உருவ வழிபாட்டில் தொடங்கி மெல்ல மெல்லத் தமது அநுபவ முதிர்ச்சிக்கு ஏற்ப அருவுருவ வழிபாட்டினை மேற்கொண்டு, பிறகு இன்னும் முதிர்ச்சியுறும் நிலையில் - அருவ நிலையில் - ஆண்டவனை எண்ணவேண்டும்; அல்லது உணர்த்தப்படுதல் வேண்டும். இறைவனே ஆசிரியராக எழுந்தருளி உபதேசித்தல் ஒருநிலை. இறைவன், மனித உருக் கொண்டு ஆட்கொள்ளல் மற்றொருநிலை. உள்ளத்தினின்று உணர்த்துதல் பிறிதொருநிலை. பக்குவநிலைக்கு ஏற்ப ஆட்கொள்ளும் முறை மாறுபடும்.

நம்நாட்டுச் சமயங்கள் துறவு நிலையை வற்புறுத்துவனவாக மேலைநாட்டினர் தவறாகக் கருதுகின்றனர்; வாழ்வில் வெறுப்பூட்டுவனவாகவும் கொள்கின்றனர். நோபல் பரிசு பெற்ற உலகப் பேரறிஞராகிய Schweitger போன்ற பெரியவர்கள் இக்கருத்தினை "world - negation and life - negation" ஆகிய இருசொற்களில் தெரிவிக்கின்றனர். விரித்துப் பேசாது நமது அருட்பெரியார்களது வாக்கைப் சுட்டிக் காட்டுகிறேன். அப்பர் ஐந்தாம் திருமுறையில் திருவேட்களப் பதிகத்தில்,

" நன்று நாள்தொறும் நம்வினை போயறும் "

என்றும்,

" இன்பம் தழைக்க இருக்கலாம் "

என்றும், மற்றொரு பாட்டில்,

" இன்பமே எந்நாளும் துன்பமில்லை "

என்றும் கூறுகின்றார். சம்பந்தப்பெருமானாரும்,

" மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும் "

என்று கூறுகின்றார். திருவள்ளுவர்தம் கருத்தும் வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டும் என்பதுதானே! ஆதலால், நாம் வாழ்கின்ற நிலையில் செவ்விய வாழ்வு - இறையுணர்வோடு கூடிய வாழ்வு-வாழ, ஆன்றோர்கள் பணித்து உள்ளனரேயன்றி, வாழாது துறவிகளாகுமாறு வற்புறுத்தவில்லை.

இளைஞர்களே! குறிக்கோள் உடையவர்களாக வாழுங்கள். எந்நிலையினும் எப்பருவத்தினும் குறிக்கோள் இன்றியமையாதது. சிந்தனைச் செல்வர்களாகும் முயற்சியொடு உணர்வுச் செல்வர்களாகவும், பண்புநலஞ் சான்றவர்களாகவும் ஆக முற்படுங்கள். பொதுவாகச் சமயத்தின் அடிநிலை உண்மைகளை, இன்றியமையாத கூறுகளை, பல சமயங்களை ஆய்ந்துதெளியுங்கள். இவ்வகை ஆய்வு உங்கள் சமயத்தினை நடுநிலைநின்று ஆராய உதவும். உங்கள் இரு கண்களாகப் போற்றவேண்டிய இரு பனுவல்கள் திருவாசகமும், திருக்குறளும் ஆகும். ' தமிழன்பன் ' எனத் தனது கல்லறையில் பொறிக்குமாறு பணித்த தலையாய தமிழ்த்தொண்டர், G. U. போப் (G. U. Pope) அவர்களது செம்மை நலம் கனிந்தொழுகும் வாக்கில் சொன்னால், " மன்பதைப் பாவலராகிய" ('Universal Bard') திருவள்ளுவரையும், நெக்கு நெக்குருக உதவும் பக்திப் பனுவலாகிய திருவாசகம் தந்தருளிய மணிவாசகரையும், உங்களது கெழுதகை நண்பர்களாக, பெரியர்களாக, வழிகாட்டிகளாகக்கொண்டு உய்யுமாறு வேண்டுகின்றேன்.

எல்லா இன்னலத்தையும் இளைஞர் உலகத்திற்குத் தந்தருளுமாறு பரம்பொருளினைப் பணிந்து வேண்டி அமைகின்றேன்.

எளியமுறையில் எடுத்துரைத்தது வியக்கத்தக்கதாக இருந்தது. கழகச் செயலாளர் நன்றியும், வாழ்த்தும் கூற விழா இனிதின் நிறைவெய்தியது.

### சேலத்தில் திருப்பாவை திருவெம்பாவை மாநாடுகள்

இவை 10—1—55, 11—5—55ல் கொண்டாடப் பெறும். திரு.ம.பா. அவர்கள் திருப்பாவை, திருவெம்பாவை பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள்.

### பிரிவாற்றுமை

நமது சமாஜத்தோடு நெருங்கிய தொடர்புடையவாயிருந்த திருவாளர் துடிசைகிழார் சிதம்பரனாரவர்கள் 30—12—54ல் சிவபதமடைந்த செய்தியை மிக வருத்தத்தோடு தெரிவிக்கிறோம்.

திரு. வி. க. மணிமண்டபக் குழுவின் கூட்டம் ஒன்று 30—12—54ல் நடந்தது. பொருட்காப்பாளராகப் பணி செய்த "கல்கி"யவர்கள் பிரிவுபற்றிய அநுதாபம் தெரிவிக்கப் பட்டு, அவருக்குப் பதிலாகத் திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயரவர்கள் அப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கட்டிடவேலை தொடங்கி நடந்துவருகின்றது. நன்கொடை பெரிதும் தேவை.

### குன்றத்தூர் மலைக்கோயில் திருப்படி விழா

திருத்தணிகையில் டிசம்பர் 31 ஜனவரி 1-ம் தேதிகளில் நடைபெறுவதைப்போலவே, இவ்விழா 22—12—54ல் நடந்தது. திருவாளர்கள் : டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், ச. சச்சிதாநந்தம்பிள்ளை, ச. சிவகுமாரன், மறை திருநாவுக்கரசு, அ. சோமசுந்தரம் செட்டியார், இராஜரத்தின முதலியார், ஜெ.கு. வரதராஜ முதலியார் முதலியோர் கலந்து கொண்டனர். மலையுச்சியில் ஒரு ரச விளக்கு (Mercury Light) ஸ்தாபிக்கப்பட்டது.

Regd. M. 2330 "SIDDHANTHAM" Vol. 28—No. 1

ஸ்ரீ

# ஆண்டாள் திருப்பாவை

மூவாயிரப்படி, ஆருயிரப்படி, சுத்தஸத்வம் தொட்டாசார்யர் ஸ்வாபதேசம், வாநமாமலை ஜீயர் ஸ்வாபதேசம், பல ஆராய்ச்சிக் குறிப்புக்களடங்கிய 616 பக்கம். நல்ல வெள்ளைக் காகிதத்திலச்சிடப் பெற்று, முழுக் கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றது.

## மயிலை மாதவதாஸன் பதிப்பு

பிரதி ஒன்றின் விலை ரூபா இரண்டரை ; ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூபா ஒன்று.

# நாலாயிரதிவ்யப்ரபந்தம்

**மயிலை மாதவதாஸன் பதிப்பு.** விலை ரூபா மூன்று ; ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—2—0. வி. பி., ரயில்வே பார்சல் மூலம் அனுப்புவதில்லை.

கிடைக்குமிடம் :—

**ம. பாலசுப்பிரமணிய முதலியார்,** பி.ஏ.,பி.எல்.,

திருவருளகம், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

சென்னை—1.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi. Edited by M. Balasubramanya Mudaliar, B.A., B.L., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 192, Lloyd Road, Royapettah, Madras-14